BHOOTHA KANNADI Tamil Monthly

# பூத கண்ணாடி

மலர் 8 | இதழ் 8 | ஆகஸ்ட் 2026 | புலனாய்வு தமிழ் மாத இதழ் | விலை ரூ.10/-




## ரியல் எஸ்டேட் வியாபாரத்தால்
# பறிபோகும் விவசாய விளைநிலங்கள்!



## சுத்திகரிப்பு நிலையத்தை ஆய்வு செய்த ஆட்சியர் கடும் எச்சரிக்கை!

– பிரியா ரவிச்சந்திரன், IAS

## கடைகளில் கெட்டுப்போன உணவுப் பொருட்கள் பறிமுதல்!

வேலூரில் அதிகாரிகள் அதிரடி!

# மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில்

# பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்





**- 44 மனுக்களுக்கு உடனடி தீர்வு!**

திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் இன்று (05 ஆகஸ்ட் 2026) மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (ஷிறி) திரு. அக்க்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., அவர்கள் தலைமை தாங்கி, பொதுமக்களிடம் இருந்து நேரடியாகக் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

பொதுமக்களுக்கும் காவல்துறைக்கும் இடையே சுமுகமான உறவை மேம்படுத்தவும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளைக் காணவும் இந்த வாராந்திரக் குறைதீர்வு முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த பொதுமக்கள் தங்களின் குடும்பப் பிரச்சினைகள், நிலத் தகராறுகள், பண மோசடி மற்றும் சட்டம் ஒழுங்கு சார்ந்த பல்வேறு புகார்களை மனுக்களாக அளித்தனர்.

பெறப்பட்ட மனுக்கள்: இன்றைய முகாமில் மொத்தம் 44 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டன.

விசாரணை உத்தரவு: பெறப்பட்ட மனுக்களைப் பொறுமையாகப் பரிசீலித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர், சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, அந்தந்த மனுக்கள் மீது உடனடியாகவும், நேர்மையாகவும் விசாரணை நடத்த உத்தரவிட்டார்.

விரைவான தீர்வு: "பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, சட்டத்திற்குட்பட்டு உரிய நடவடிக்கை மிக விரைவில் எடுக்கப்படும்" என்று எஸ்பி அக்க்ஷய் அனில் வாகரே தெரிவித்தார்.

காவல்துறையின் இந்த வெளிப்படையான மற்றும் விரைவான அணுகுமுறை, குறைதீர்வு கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட காவல் துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளுகையாளர்கள் பலர் உடனிருந்தனர்.

# டிஜிட்டல் உலகில் அதிகரித்து வரும் சைபர் குற்றங்கள்

## – விழிப்புணர்வே முதற்கடமை

இன்றைய நவீன டிஜிட்டல் காலகட்டத்தில், இணையத்தின் பயன்பாடு நம் அன்றாட வாழ்க்கையின் பிரிக்க முடியாத அங்கமாகிவிட்டது. தொழில்நுட்ப வளர்ச்சி நமக்கு பல்வேறு நன்மைகளை வழங்கினாலும், அதனுடன் சேர்ந்து சைபர் குற்றங்களும் (இணையவழி குற்றங்கள்) அபாயகரமான வேகத்தில் அதிகரித்து வருவது பெரும் கவலைக்குரிய விஷயமாகும். பண மோசடி, அடையாளத் திருட்டு, சமூக ஊடக அவதூறுகள் என இதன் வடிவங்கள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கின்றன.

இணையவழி குற்றங்கள் பெருகுவதற்குப் போதிய டிஜிட்டல் கல்வியறிவும் விழிப்புணர்வும் இல்லாமையே முதன்மைக் காரணமாகும். ஸ்மார்ட்போன் மற்றும் இணையப் பயன்பாடு அதிகரித்துள்ள அளவுக்கு, அதன் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த அறிவு மக்களிடம் முழுமையாகச் சென்றடையவில்லை. பேராசை அல்லது பயத்தை முதலீடாகக் கொண்டு செயல்படும் மோசடி கும்பல்கள், போலி குறுஞ் செய்திகள், பகுதி நேர வேலைவாய்ப்பு மோசடிகள் மற்றும் போலி 'லோன் ஆப்'கள் (Loan Apps) மூலம் எளிய மக்களை எளிதில் ஏமாற்றி விடுகின்றனர்.

இப்பாரிய சவாலை எதிர்கொள்ள அரசு பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிரத்யேக சைபர் குற்றப் பிரிவு காவல்துறையினர் உருவாக்கப்பட்டு, '1930' என்ற தேசிய அளவிலான அவசர உதவி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாகப் புகாரளித்து தங்களது பணத்தை முடக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தகவல் தொழில்நுட்ப சட்டங்களின் கீழ் கடுமையான தண்டனைகளும், அரசு தரப்பில் தொடர் விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சட்டங்களும் நடவடிக்கைகளும் ஒருபுறம் இருந்தாலும், பொதுமக்களின் சுய விழிப்புணர்வே இதற்கு நிரந்தர தீர்வாகும். முன்பின் தெரியாத நபர்களிடம் தங்களது வங்கி விவரங்கள், கடவுச்சொற்கள் (Passwords) மற்றும் OTP எண்களை எக்காரணம் கொண்டும் பகிரக் கூடாது. இணையத்தில் வரும் கவர்ச்சிகரமான விளம்பரங்களையும், தேவையற்ற லிங்குகளையும் (லிங்க்ஸ்) கிளிக் செய்வதைத் தவிர்க்க வேண்டும். டிஜிட்டல் விழிப்புணர்வை ஒரு பாதுகாப்பு கவசமாக மாற்றுவதே நம்மை இணையப் பொருளாதார இழப்புகளிலிருந்து காக்கும்.

– ஆசிரியர்

**பூத கண்ணாடி**

புலனாய்வு தமிழ் மாத இதழ்

மலர் 8 | இதழ் 8 | ஆகஸ்ட் 2026 | விலைரூ.10/

ஆசிரியர்

**GR.முருகன்** 9003006655

செய்தி ஆசிரியர்:

**ஸ்ரீ வேதாத்திரியன்** M.P.

துணை ஆசிரியர்:

**P.பிரபாகரன்**

**A. சிவகுமார்** B.com. B.L. மதுரை

தலைமை செய்தியாளர்கள்:

S.**சதீஷ்குமார்**, S.**ஆனந்தன்**

P.R.**ஜெயக்குமார்**, S.**தனிஷ்**

செய்தியாளர்கள்

K.**பரத்**, A.**சுனில் குமார்,**

R.**செந்தில்குமார்**, S.**பிரதீப் இன்பா**

புகைப்படக் கலைஞர்கள்

C.**நித்தியானந்தம்**

சட்ட ஆலோசகர்கள்

M.**ஞானசேகரன்** B.A., B.L.,வேலூர்

M.**ஜெயசீலன்** M.Tech., L.L.B., சென்னை உயர்நீதிமன்றம்

பதிவு அலுவலகம்:

**BHOOTHA KANNADI**

எண்.3/74, சாலைத் தெரு,
திம்மணாசாரிகுப்பம் அஞ்சல்,
அரப்பாக்கம், வேலூர் மாவட்டம்
Cell: 9003006655
bhoothakannadi18@gmail.com
Visit us: **bhoothakannadi.com**

வடிவமைப்பு:

**ஆர்டிஸ்ட் ராஜா** 9840643963

இதழில் வெளியாகும் விளாம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பூத கண்ணாடி நிர்வாகம் பொறுப்பல்ல.


RMO ரவிச்சந்திரன்

# வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் லஞ்ச புகார், முறைகேடு?

## RMO தலைமையில் வசூல் வேட்டை... அதிர வைக்கும் புகார்கள்!

வேலூர் வரலாற்றுச் சிறப்புமிக்க பென்ட்லேண்ட் பழைய மருத்துவமனையின் பாரம்பரியத்தோடும், 1997 இல் திட்டமிடப்பட்டு அடுக்கம்பாறையில் 90 ஏக்கர் பரப்பளவில் 2005 மார்ச் மாதம் தொடங்கப்பட்டு, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டங்கள் மற்றும் ஆந்திர எல்லைப் பகுதி மக்களுக்கு முதன்மை மருத்துவ ஆதாரமாக விளங்கும் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தற்போது முறைகேடுகளின் புகலிடமாக மாறிப்போயுள்ளதாகப் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கொந்தளிப்புடன் குற்றம் சாட்டுகின்றனர்.

டீன் ரோகினி தேவி மற்றும் மருத்துவக் கண்காணிப்பாளர் (MS) ரதிதிலகம் ஆகியோரின் மேற்பார்வையில் இயங்கும் இந்த மருத்துவமனையில், அனைத்துத் துறை ஒருங்கிணைப்பாளராகவும், குடியிருப்பு மருத்துவ அலுவலராகவும் (RMO) பணியாற்றி வரும் ரவிச்சந்திரன் என்பவரது தலைமையில் அதிகார துஷ்பிரயோகமும் பல லட்சம் ரூபாய் வசூல் வேட்டையும் தங்குதடையின்றி நடைபெற்று வருவதாகப் புயலைக் கிளப்பும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக, பழைய பென்ட்லேண்ட் வளாகத்தில் இயங்கி வரும் மருத்துவமனை பிரசவம் மற்றும் குழந்தைகள் நல அவசர சிகிச்சைப் பிரிவில், ஏழைத் தாய்மார்களிடம் வசூல் வேட்டை நடப்பதாகக் கூறப்படுகிறது. சாதாரண பிரசவம் முடிந்ததும் தாய்மார்கள் வாங்கி வரும் புதிய காடா துணிக்குள் பெண் குழந்தையா இருந்தால் ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை கட்டாயம் வைத்துத் தர வேண்டும் என்றும், ஆண் குழந்தை பிறந்தால் ரூ. 2000 வரை கட்டணம் நிர்ணயிக்கப்படுவதாகவும், அறுவை சிகிச்சை பிரசவத்திற்கு (Cesarean) முடி

சிரைப்பதற்கு ரூ. 500 முதல் ரூ. 1,000 வரையிலும், ஆபரேஷனுக்கு ரூ. 2,500 முதல் ரூ. 3000 வரையிலும் கறாராக வசூலிக்கப்படுவதாகவும் தெரிகிறது.

இது தவிர, வென் பிளான் (Venflon) போட ரூ. 200, குளுக்கோஸ் பாட்டில் ஒன்றுக்கு ரூ. 100, டிஸ்சார்ஜ் ஆகும்போது ட்ரோலி (தள்ளுவண்டி) தள்ளுபவருக்கு ரூ. 150 முதல் ரூ. 200, வாட்ச்மேனுக்கு ரூ. 200 எனப் பட்டியல் நீள்கிறது. ஸிவிளி ரவிச்சந்திரனுக்குச் சாதகமாகச் செயல்படும் பிரகாஷ், பாலாஜி, ஜோசப், ரேவதி ஆகிய மருத்துவப் பணியாளர்கள் மட்டுமே சுழற்சி முறையின்றி 24 மணி நேரமும் இந்த வார்டுகளில் பணியமர்த்தப்படுவதாகவும், வசூலாகும் தொகையில் ஒரு சிறு பகுதியைச் செவிலியர் சிற்றுண்டிக்கு ஒதுக்கிவிட்டு, பெரும்பகுதியை ஸிவிளி கமிஷனாகப் பெற்றுக் கொள்வதாகவும், ஒரு நாளைக்கு 30 பிரசவங்கள் வீதம் நாளொன்றுக்கு ரூ. 60,000 வரை சட்டவிரோதமாக வசூலிக்கப்படுவதாகவும் மருத்துவ வட்டாரத்தில் குற்றச்சாட்டு எழுகிறது.



இதேபோல், இறந்தவர்களின் உடல்களை உடற்கூறாய்வு (Post-mortem) செய்யும் அறையிலும் ஸிவிளியின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள சங்கர், கண்ணன், சரவணன் ஆகியோர் மூலமாக ஒரு பிணத்தை ஆய்வு செய்து தர ரூ. 2,000 முதல் ரூ. 3,500 வரையிலும், உடலை வாகனத்தில் ஏற்றி வைப்பதற்கு குறைந்தபட்சம் ரூ. 500 பெறப்படுவதாகவும், சமீபத்தில் மலைவாழ் மக்கள் பிரிவைச் சேர்ந்தவரிடம் ஒருவரின் இறந்த உடலை பிணக்கூறாய்வு செய்ய ரூ. 2,000 லஞ்சம் வாங்கிய வீடியோ சமூக வலைதளங்களிலும் செய்திச் சேனல்களிலும் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியதும் சுட்டிக்காட்டப்படுகிறது.



மருத்துவப் பணியாளர் செந்தில்



கிஸ்டல் நிறுவனம் மேனேஜர் ஜீவானந்தம்

மேலும், விபத்து அவசர சிகிச்சை பிரிவில் நோயாளிகளை வார்டுகளுக்குச் சுமந்து செல்ல (ட்ரோலி) தள்ளுவண்டி பணியாளர்கள் ரூ. 200 முதல் ரூ. 300 வரை வசூலிப்பது, பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழுக்கு அந்த அலுவலகத்தில் ஒரு சான்றிதழுக்கு ரூ. 500, இரண்டுக்கு ரூ. 1,000, மூன்றுக்கு ரூ. 1,500 என வெளிப்படையாகவே கட்டணம் நிர்ணயிப்பது, முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் நிதியில் வெளிப்படைத்தன்மையற்ற சூழல் நிலவுவது, மற்றும் ஏழை மற்றும் மலைவாழ் மக்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சைக்குக் கூட ரூ. 500 முதல் ரூ. 1,000 வரை கட்டாய வசூல் செய்வது என அடுக்கம்பாறை மருத்துவமனை லஞ்சத்தின் பிடியில் சிக்கியுள்ளதாகப் புகார்கள் அடுக்குகின்றன.

இதனிடையே, RMO-வின் முழு ஆதரவோடு 'ராஜா வீட்டுப் பிள்ளை' போலச் செயல்படும் செந்தில் என்ற மருத்துவப் பணியாளர் பணிக்கு ஒழுங்காக வராமலேயே, அரசியல் செல்வாக்கைக் காட்டி ஓ.பி (OP) பிரிவில் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு முழுச் சம்பளம் பெறுவதாகவும், தட்டிக் கேட்கும் செவிலியர்களையும் சக ஊழியர்களையும் மிரட்டுவதாகவும் அதிர்ச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், மருத்துவமனையில் தூய்மை மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வரும் கிஸ்டல் தனியார் நிறுவனத்தின் மேலாளர் ஜீவானந்தம் மற்றும் RMO கூட்டணி மீது எழும் புகார்களில், ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு பெயிண்டிங், பிளம்பிங், எலக்ட்ரீஷியன் பணிகளைச் செய்ய வைத்துவிட்டு, வெளியிலிருந்து ஆட்களை வரவழைத்து வேலை செய்ததாகப் போலி கணக்கு காட்டி லட்சக்கணக்கில் நிதி கையாடல் செய்யப்படுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

செக்யூரிட்டிகள் பொதுமக்களிடம் அராஜகம் செய்வதும், 'சங்கர்' என்ற செக்யூரிட்டி லஞ்சம் வாங்கி மிரட்டிய செய்தி நாளிதழ்களில் வந்தும் நடவடிக்கை இல்லாமல் இருப்பதும், பகலில் கெடுபிடி காட்டும் செக்யூரிட்டிகள் இரவு 10 மணிக்கெல்லாம் தூங்கிவிடும் நிலையில், ஆய்வுக்கு வரும் உயரதிகாரிகளுக்குக் கணக்கு காட்ட தூங்கும்

செக்யூரிட்டிகளை எழுப்பி நிற்கவைத்து 'A.S.O' போட்டோ எடுத்து அனுப்பும் விசித்திர நாடகம் அரங்கேறுவதாகவும் தெரிவிக்கின்றனர். இதோடு, RMO ரவிச்சந்திரன் காட்பாடி சில்க் மில் அருகில் தனியாக கிளினிக் நடத்தி வருவதாகவும், காலையில் அரசு மருத்துவமனைக்கு வந்து கையெழுத்திட்டு வசூல் நிலவரங்களைக் கவனித்துவிட்டு, தீவிர சிகிச்சைக்கு வரும் வசதியான நோயாளிகளைத் தனது சொந்த கிளினிக்கிற்குச் செல்லுமாறு ரகசிய ஆலோசனை வழங்கி அனுப்பி வைப்பதாகவும், பெரும்பாலான மருத்துவர்களும் செவிலியர்களும் நோயாளிகளிடம் கனிவின்றி நடந்து கொள்வதாகவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. மேலும் மருத்துவமனை அலுவலகத்தில் டீன் மற்றும் மெடிக்கல் சூப்பிரண்ட், ஆர் எம் ஓ பார்க்க வரும் பொதுமக்கள் மாற்று அதிகாரிகள் சமூக ஆர்வலர்கள் இப்படி யாரையும் அவ்வலுவலகத்தில் பணிபுரியும் ஸ்டாலின் மற்றும் குவாலிட்டி மேனேஜர் மங்களசுந்தரம் ஆகியோர் தடுத்து வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது மேலும் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மருந்து மாத்திரை வாங்கி செல்வதற்கு நீண்ட வரிசையில் மணி கணக்கில் காத்திருக்க வேண்டிய அவளை நிலை ஏற்பட்டுள்ளது இதனை சரி செய்வதற்கு மருத்துவ நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிறார்கள்



எம்.எஸ்.ரோகினி தேவி

இந்த காரசாரமான குற்றச்சாட்டுகள் குறித்து RMO ரவிச்சந்திரனை நேரில் சந்தித்து விளக்கம் கேட்டபோது, அவர் தன் மீதான அனைத்துப் புகார்களையும் முற்றிலுமாக மறுத்தார். மருத்துவப் பணியில் குறைபாடுகள் ஏற்படும்போதோ அல்லது சரிவரப் பணியாற்றாத நேரங்களிலோ பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை, கண்டிப்பு அல்லது இடமாற்றம் செய்யப்படுவதால், அதிருப்தியடையும் சிலர் வேதனையின் காரணமாகவும் பொறாமை காரணமாகவுமே நிர்வாகத்தின் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதாகத் தெரிவித்தார்.




ஏற்கனவே லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் சிக்கிய ஊழியர்கள் மீது இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதால் ஏற்பட்ட மன உளைச்சலாலேயே தவறான தகவல்களைப் பரப்பி வருவதாகவும், ஆய்வு/பரிசோதனை மையத்தில் பணம் வாங்கிய புகாரில் ஒருவர் தற்காலிக பணிநீக்கம் (Suspension) செய்யப்பட்டுள்ளதாகவும் விளக்கமளித்தார். கிஸ்டல் நிறுவன மேலாளர் ஜீவானந்தம் தனது சொந்தப் பணத்தைச் செலவழித்துக்கூட மருத்துவமனைத் தூய்மைப் பணிகளைத் திறம்படச் செய்து வருவதாகவும், ஹவுஸ்கீப்பிங் பணியாளர்களிடம் உள்ள எலக்ட்ரீசியன், பெயிண்டிங் போன்ற கூடுதல் திறன்களை மருத்துவமனை மேம்பாட்டிற்காகப் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர போலி கணக்குகள் எதுவும் காட்டப்படவில்லை என்றும் கூறினார்

செக்யூரிட்டிகள் இரவில் தூங்குவது, கனிவற்ற முறையில் நடப்பது மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் கோபமாகப் பேசுவது கவனத்திற்கு வந்துள்ளதால் அவை விரைவில் சரிசெய்யப்படும் என்றும், பணிக்கு வராமல் கையெழுத்து மட்டும் போடும் செந்தில் மீது கண்காணித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதி கூறினார். மேலும், காட்பாடியில் உள்ள கிளினிக்கைத் தனது பிள்ளைகளே பராமரித்து வருவதாகவும், அரசுப் பணிச்சுமை காரணமாகத் தான் அங்குச் செல்வதில்லை என்றும் கூறிய RMO ரவிச்சந்திரன், நிலுவையில் உள்ள குறைகள் அனைத்தும் விரைவில் கட்டாயம் சரிசெய்யப்படும் எனத் தெரிவித்தார்.

நிர்வாகத் தரப்பில் இக்குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டாலும், அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளும் வசூல் வேட்டைகளும் தொடர்ந்து நடைபெற்று வருவதாக நோயாளிகளும் சமூக ஆர்வலர்களும் குற்றம் சாட்டுகின்றனர். 600க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த மிகப்பெரிய அரசு மருத்துவமனையில், ஏழை, எளிய மக்களின் வயிற்றிலடிக்கும் இத்தகைய முறைகேடுகள் குறித்துத் தமிழக அரசும், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சுகாதாரத் துறைச் சார்ந்த உயர் அதிகாரிகளும் நேரில் வந்து ஆய்வு மேற்கொண்டு, தவறிழைக்கும் அதிகாரிகள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் மீது உடனடியாகக் கடுமையான லஞ்ச ஒழிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் தீவிர எதிர்பார்ப்பாக உள்ளது.

# அரசு வாகன பயன்பாட்டில் ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு கட்டுப்பாடு...

## முதல்வர் விஜய் அதிரடி.. கலக்கத்தில் அதிகார வர்க்கம்!



தமிழக அரசுத் துறைகளில் ஐஏஎஸ் அதிகாரிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பயன்படுத்தி வரும் அரசு வாகனங்களின் தேவையற்ற பயன்பாட்டைக் கட்டுப்படுத்த, தலைமைச் செயலகம் அதிரடி நடவடிக்கைகளைக் கையில் எடுத்துள்ளது.

அரசின் 41 துறைகளின் கீழ் சுமார் 15,000க்கும் மேற்பட்ட வாகனங்கள் இயங்கி வரும் நிலையில், தணிக்கை மற்றும் ரகசிய விசாரணைகளில் பல மூத்த அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு வாகனத்தைத் தாண்டி, துறை சார்ந்த 3 முதல் 4 கூடுதல் வாகனங்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி வந்தது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அரசுக்கு சொந்தமான சொகுசு கார்கள் மற்றும் ஜீப்புகள் லஞ்சப் பணம் பரிமாற்றம் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும், ஓடாத வாகனங்களின் பெயரில் போலி கணக்குக் காட்டி எரிபொருள் படிகளைச் சுருட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டதாக வெளியாகியுள்ள அதிர்ச்சித் தகவல்கள் நிர்வாக வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது தமிழக அரசு தனது வாகனங்களின் எரிபொருளுக்காக மட்டும் மாதந்தோறும் சுமார் ₹25 கோடி ரூபாயைச் செலவிட்டு வருகிறது. இந்தத் தடையற்ற முறைகேடுகள், போலி பில்கள் மற்றும் வாகனங்களின் அநியாய பயன்பாட்டைக் கட்டுப்படுத்தினால் அரசின் மாதாந்திரச் செலவில் கணிசமான தொகையைச் சேமிக்க முடியும் என்று நிதித் துறை வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அரசின் நிதி இழப்பை உடனடியாகத் தடுக்கும் நோக்கில், தமிழக அரசு தற்போது கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய அதிரடி அரசாணையைப் பிறப்பித்துள்ளது.

இந்த புதிய உத்தரவின்படி, ஐஏஎஸ் அதிகாரிகள் பொதுத் துறை மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரே ஒரு சொகுசு வாகனத்தை மட்டுமே பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் தங்களது வீடுகள், அலுவலகங்கள் அல்லது உதவியாளர்களின் பயன்பாட்டில் முடக்கி வைத்துள்ள கூடுதல் துறைசார்ந்த வாகனங்களை உடனடியாகத் துறைத் தலைமை அலுவலகங்களில் ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த உத்தரவைத் தொடர்ந்து, சென்னை சேப்பாக்கம், நந்தனம், சைதாப்பேட்டை, எம்.ஆர்.சி நகர், தரமணி மற்றும் கிண்டி ஆகிய முக்கிய அரசு வளாகங்களில் அதிகாரிகள் தங்களது கூடுதல் வாகனங்களை வரிசையாகக் கொண்டு வந்து ஒப்படைத்து வருகின்றனர்.

இக்கட்டுப்பாடு ஐஏஎஸ் அதிகாரிகளோடு முடிந்துவிடாமல், பிற துறை உயர் அதிகாரிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம், நீர்வளத் துறை, பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகிய துறைகளில் பணிபுரியும் ஐஏஎஸ் அல்லாத உயர் அதிகாரிகளும் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு வாகனங்கள் குறித்த முழுமையான அறிக்கையை உடனடியாகத் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அரசின் இந்த அதிரடி நடவடிக்கை அதிகார வர்க்கத்தினரிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ள அதே வேளையில், மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.




# சுத்திகரிப்பு நிலையத்தை ஆய்வு செய்த ஆட்சியர் கடும் எச்சரிக்கை!

## – பிரியா ரவிச்சந்திரன், IAS

தொழில் நகரமான ராணிப்பேட்டையில் அமைந்துள்ள சிட்கோ (SIDCO) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (CETP) செயல்பாடுகள் குறித்து, ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி ந. பிரியா ரவிச்சந்திரன், IAS அவர்கள் செவ்வாய்க்கிழமை அன்று நேரில் சென்று அதிரடி ஆய்வு மேற்கொண்டார். தோல் தொழிற்சாலைகள் மற்றும் இதர உற்பத்தி அலகுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரைச் சுத்திகரிக்கும் பணிகள் தடையின்றி மற்றும் சுற்றுச்சூழல் விதிகளுக்கு உட்பட்டு நடக்கிறதா என்பதை உறுதி செய்ய இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வின் போது சுத்திகரிப்பு நிலையத்தின் தற்போதைய நிலை, சுத்திகரிப்புத் திறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

**சுத்திகரிப்பு தொழில்நுட்பம் மற்றும் தரம்:**

சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் கழிவுநீரின் அளவு, சுத்திகரிப்பு முறைகள் (Primary and Secondary Treatment Processes) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் குறித்து ஆட்சியர் கேட்டறிந்தார். கழிவுநீரை மறுசுழற்சி செய்யும் தொழில்நுட்ப செயல்பாடுகளை அவர் நேரடியாகப் பார்வையிட்டார்.

சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் அமைந்துள்ள ஆய்வகத்திற்குச் சென்ற ஆட்சியர், அங்கு தினசரி



மேற்கொள்ளப்படும் நீர் மாதிரி (Water Sample) சோதனைகளின் பதிவேடுகளை ஆய்வு செய்தார். சுத்திகரிக்கப்படும் நீரின் பி.ஹெச் (pH) அளவு, வேதியியல் ஆக்சிஜன் தேவை (COD) மற்றும் உயிரியல் ஆக்சிஜன் தேவை (BOD) ஆகிய அளவீடுகள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிமுறைகளுக்குள் இருக்கிறதா என்பதை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு:**

தொழிற்சாலைக் கழிவுகள் அல்லது சுத்திகரிக்கப்படாத நச்சு நீர் எக்காரணம் கொண்டும் பாலாறு அல்லது திறந்தவெளிப் பகுதிகளில் கலக்கக் கூடாது என ஆட்சியர் கண்டிப்புடன் அறிவுறுத்தினார். ஆன்லைன் மூலமாகத் தரவுகளைக் கண்காணிக்கும் தற்போதைய அமைப்பின் (Continuous Online Effluent Monitoring System) செயல்பாடுகளையும் அவர் சரிபார்த்தார்.

**ஆய்வை முடித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சியர் ந. பிரியா ரவிச்சந்திரன் தெரிவித்ததாவது:**

"ராணிப்பேட்டை மாவட்டத்தின் முக்கிய வாழ்வாதார ஆதாரங்களைப் பாதுகாப்பதும், சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்திருப்பதும் நமது முக்கிய கடமையாகும். சிட்கோ சுத்திகரிப்பு நிலையம் தனது முழுத் திறனுடன், எவ்வித தொய்வுமின்றி இயங்க வேண்டும்.

விதிகளை மீறி சுத்திகரிக்கப்படாத நச்சு நீரைத் திறந்தவெளியிலோ அல்லது நீர்நிலைகளிலோ வெளியேற்றும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டால், அவற்றின் மீது எவ்விதப் பரிந்துரையுமின்றி மாசுக்கட்டுப்பாட்டு வாரிய விதிகளின் கீழ் சட்டப்பூர்வமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு துண்டிப்பு மற்றும் அபராதம் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தயங்க மாட்டோம்."

இந்த திடீர் ஆய்வின் போது தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) உள்ளூர் பொறியாளர்கள், சிட்கோ நிலையத்தின் முதன்மைப் பொறுப்பாளர்கள், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணவும், பொதுமக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து இத்தகைய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று இந்த ஆய்வின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

# வேலூர் விமான நிலையம் திறக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

## – ஒன்றிய இணை அமைச்சர் முருகன்



வேலூர் சங்கரன்பாளையத்தில் நடந்த மனதின் குரல் நிகழ்ச்சியில் ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் பங்கேற்று பேசினார். பின்னர் நிருபர்கள் சந்திப்பில் கூறியதாவது: இந்தியா முழுவதும் மக்களுக்கு செய்கின்ற சேவைகள், பணிகள் மற்றும் அவர்களின் சாதனைகளை உலகம் அறிய செய்வதே மனதின் குரல் நிகழ்ச்சியின் நோக்கமாக பிரதமர் நரேந்திரமோடி உரையாற்றி வருகிறார்.

கார்கில் வெற்றி தினத்தைக் கொண்டாடுகின்ற இந்தத் தருணத்தில், கார்கில் வெற்றி தினத்தில் பங்களித்த ராணுவ வீரர்களைப் போற்றியும், அவர்களுக்கு மரியாதை செலுத்தியும், அவர்களின் வீரத்தை உலகிற்கு மனதின் குரல் நிகழ்ச்சியில் எடுத்துரைத்துள்ளார். இந்தியாவை சேர்ந்த விளையாட்டு வீரர்களுடைய பங்களிப்பைப் பற்றியும், அதேபோல் ஜப்பான் பேட்மிண்டன் போட்டியில் வீராங்கனை சிந்து வெற்றி பெற்றதையும் பேசியிருக்கிறார். பிஎம் கிசான் திட்டத்தில் 11 கோடி விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கிலேயே செலுத்தப்படுகிறது.

விரைவில் வேலூர் விமான நிலையம் திறப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினர். நிகழ்ச்சியில் பாஜ நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.



# வெற்றி நோக்கிய பாய்ச்சலா? நிதியின் விளிம்பில் தத்தளிப்பா?

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2026-27

– ஓர் அலசல்!

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, தவெக தலைமையிலான புதிய கூட்டணி அரசின் முதல் முழுமையான பட்ஜெட் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2036க்குள் தமிழகத்தை 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதே இலக்கு என முழக்கமிட்டு, கல்வி, மகளிர் நலம், மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கு இந்த பட்ஜெட்டில் அதீத முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய பட்ஜெட்டில் பல்வேறு அதிரடிப் புதிய திட்டங்களும், கூடுதல் நிதி ஒதுக்கீடுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

**1. மகளிருக்கான 'அண்ணனின் சீர்' மற்றும் தாலிக்குத் தங்கம்**

பெண்களின் திருமண நிதியுதவியாக 'அண்ணனின் சீர்' என்ற புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் தகுதியுள்ள மணப்பெண்களுக்கு 8 கிராம் (ஒரு சவரன்) தங்கக் காசும், பட்டுப் புடவையும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, இதற்காக ₹812 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2. அரசு மருத்துவமனைகளில் 'தாய் மாமன் தங்க மோதிரம்'**

அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் 1 கிராம் தங்க மோதிரம் வழங்கும் 'தாய் மாமன் தங்க மோதிரத் திட்டம்' செப்டம்பர் 15 முதல் (பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்) அமலுக்கு வருகிறது. இதற்காக ₹560 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஏழைக் குடும்பங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

**3. மாணவர்களுக்கான 'வெற்றி மடிக்கணினி' மற்றும் கல்வி ஊக்கம்**

கல்லூரி மாணவர்களுக்காக மீண்டும் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் ₹2,000 கோடி ஒதுக்கீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. 11ஆம் வகுப்பு படிக்கும் 5.32 லட்சம் மாணவர்களுக்கு இலவச மிதிவண்டியுடன், பாதுகாப்புக்காக ஹெல்மெட் மற்றும் வாட்டர் பாட்டில் ஹோல்டர்

வழங்கும் புதிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு ₹710 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**4. 200 யூனிட் இலவச மின்சாரம்**

வீட்டு உபயோக மின்சார நுகர்வில், இருமாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்டுகளுக்குள் பயன்படுத்தும் தகுதியான நுகர்வோருக்கு, இதுவரை இருந்த 100 யூனிட் இலவச மின்சாரம் 200 யூனிட்டாக உயர்த்தப்பட்டுள்ளது.

**5. விவசாயக் கடன் தள்ளுபடி மற்றும் பசுமைத் திட்டங்கள்**

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய ₹5,932 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 10,000 பெண்களுக்கு இலவசக் கறவை மாடுகள் மற்றும் கைம்பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக 5 ஆடுகள் வழங்கும் திட்டமும் விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும்.

**6. உட்கட்டமைப்பு மற்றும் கிமி தொழில்நுட்பப் பாய்ச்சல்**

ஏழை எளியோருக்காக புதிய வீட்டுவசதித் திட்டமாக ‘வெற்றி வீடு திட்டம்’ மூலம் ரூ.3,500 கோடியில் 70,000 கான்கிரீட் வீடுகள் கட்டப்படும்.

சென்னைக்கு அருகே 'அறிவகம்' என்ற பெயரில் இந்தியாவின் முதல் பிரத்யேக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கண்டுபிடிப்பு நகரம் (AI City) உருவாக்கப்படவுள்ளது.

**மக்களுக்குப் பாதகமான மற்றும் ஏமாற்றமளிக்கும் அம்சங்கள்**

பட்ஜெட்டில் கவர்ச்சிகரமான அறிவிப்புகள் பல இருந்தாலும், சாமானிய மக்களும், எதிர்க்கட்சிகளும் சுட்டிக்காட்டும் சில முக்கியப் பின்னடைவுகளும், கவலைகளும் இதில் உள்ளன.

**1. முக்கிய தேர்தல் வாக்குறுதிகள் மிஸ்ஸிங்!**

தவெக தேர்தல் அறிக்கையில் பிரதானமாகப் பேசப்பட்ட பல திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை.

குடும்பத் தலைவிகளுக்கான மாதாந்திர உரிமைத்தொகை ₹1,000ல் இருந்து ₹2,500 ஆக உயர்த்தப்படும் என்ற வாக்குறுதி தள்ளிப்போடப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 6 இலவச சிலிண்டர்கள் வழங்கும் திட்டம் மற்றும் அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு முழுமையான இலவசப் பயணம் போன்ற அறிவிப்புகள் இந்த பட்ஜெட்டில் முற்றிலுமாக விடுபட்டுள்ளன. இது இல்லத்தரசிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

**2. ₹10 லட்சம் கோடி கடன் சுமை!**

தமிழகத்தின் மொத்தக் கடன் சுமை தற்போது தோராயமாக ₹10 லட்சம் கோடியைத் தொட்டுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் மட்டும் கூடுதலாக ₹1.73 லட்சம் கோடி கடன் வாங்க பட்ஜெட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அதீத கடன் சுமை, எதிர்காலத்தில் மக்கள் மீது மறைமுக வரிவிதிப்பாகவோ அல்லது அத்தியாவசியச் சேவைகளின் கட்டண உயர்வாகவோ மாறக்கூடும் என்ற அச்சத்தைப் பொருளாதார வல்லுநர்கள் எழுப்புகின்றனர்.

**3. மதுபானக் கட்டண உயர்வு மற்றும் மறைமுக நிதித் திரட்டல்**




பட்ஜெட்டின் வருவாயைப் பெருக்க, தகவல் தொழில்நுட்ப முறைகேடுகளைத் தடுத்தல் (Faceless GST) மூலமாக ₹15,000 கோடியும், மதுபான உற்பத்தியாளர்கள் மீதான கூடுதல் சிறப்புரிமைக் கட்டணம் (Additional Privilege Fee) மூலம் ஆண்டிற்கு ₹1,000 கோடியும் திரட்ட இலக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும், மதுபானக் கூடுதல் கட்டணங்கள் (Liquor Cess) மூலம் ₹16,000 கோடி வருவாய் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது சாமானிய மக்களைப் பாதிக்கும் ஒரு காரணியாகப் பார்க்கப்படுகிறது.

முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் தலைமையிலான புதிய அரசின் இந்த முதல் பட்ஜெட், "மக்களுக்கான சமூக நலன்" மற்றும் "தொழில்நுட்பப் பொருளாதார வளர்ச்சி" ஆகிய இரண்டிற்கும் சம முக்கியத்துவம் கொடுக்க முயன்றுள்ளது. இருப்பினும், ₹10 லட்சம் கோடி கடன் சுமையை வைத்துக் கொண்டு, முக்கியத் தேர்தல் வாக்குறுதிகளான ₹2500 உரிமைத்தொகை மற்றும் இலவச சிலிண்டர்களை அரசு எவ்வாறு நிறைவேற்றப் போகிறது என்பதுதான் தற்போதைய மில்லியன் டாலர் கேள்வி.

## தமிழக பட்ஜெட் (2026–27):

# அரசியல் கட்சிகளின் கருத்துகள் என்ன?

தமிழ்நாடு சட்டப்பேரவையில் தாக்கலான முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அரசின் 2026–27 நிதியாண்டுக்கான பட்ஜெட் குறித்து தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் வெளியிட்டுள்ள பல்வேறு கருத்துக்கள்.



**திமுக:** முன்னாள் முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், "இந்த பட்ஜெட் திராவிட மாடல் திட்டங்களின் மறுவடிவமே (Remake) தவிர வேறில்லை" என்று விமர்சித்துள்ளார். முந்தைய திமுக அரசின் திட்டங்களுக்குப் பெயர் மாற்றி 'வெற்றி' என்ற ஸ்டிக்கர் ஒட்டியுள்ளதாகக் கூறிய அவர், இது மக்களுக்கு ஏமாற்றமளிக்கும் 'வெற்று பட்ஜெட்' எனச் சாடியுள்ளார்.



**அதிமுக:** எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, "பட்ஜெட்டில் புதிய தொலைநோக்குத் திட்டங்களோ, நிதி ஆதாரத்தைப் பெருக்கும் வழிகளோ இல்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். மாநிலத்தின் கடன் சுமை 10 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ள நிலையில், கடன் சுமையைக் குறைக்க எவ்வித ஆக்கப்பூர்வமான தீர்வும் இதில் இல்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.



**விசிக:** தொல். திருமாவளவன், பட்ஜெட்டில் பட்டியலின, பழங்குடியின மற்றும் சிறுபான்மையின மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை வரவேற்றுள்ளார். எனினும், அடித்தட்டு மக்களின் விளிம்புநிலை மேம்பாட்டிற்கான கூடுதல் நிதித் தேவைகளை அரசு உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.



**நாம் தமிழர் கட்சி:** சீமான், பட்ஜெட்டில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதை கவனித்தாலும், தமிழகத்தின் நீண்டகால வாழ்வாதாரப் பிரச்சினைகளான விவசாய உள்கட்டமைப்பு மற்றும் நதிநீர் உரிமைகளைப் பாதுகாக்க வலுவான திட்டங்கள் இல்லாதது ஏமாற்றமளிக்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.



**பாமக:** பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், ஏற்கனவே தங்கள் கட்சி வெளியிட்ட நிழல் பட்ஜெட்டின் அம்சங்களோடு ஒப்பிட்டு, முழு மதுவிலக்கை அமல்படுத்துவதற்கான தெளிவான காலக்கெடுவும், விவசாயப் பெருமக்களுக்கான போதிய சிறப்புப் பாதுகாப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் விடுபட்டுள்ளதாக அதிருப்தி தெரிவித்துள்ளார்.



**இடதுசாரிகள் (CPI & CPM):** இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய இரு கட்சிகளின் தலைவர்களும், ஏழை எளிய மாணவர்களுக்கான 'வெற்றி மடிக்கணினித் திட்டம்' மற்றும் கல்விசார் ஒதுக்கீடுகளை வரவேற்றுள்ளனர். அதேவேளையில், மாநிலத்தின் கடன் சுமையை மத்திய அரசிடமிருந்து உரிய நிதியைப் பெற்றுச் சமாளிப்பதற்கான அழுத்தமான உத்திகள் பட்ஜெட்டில் குறைவாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறாக, புதிய அரசின் முதல் பட்ஜெட் ஆளுங்கட்சியினரால் 'வெற்றித் தமிழகத்தின்' தொடக்கமாகக் கொண்டாடப்பட்டாலும், எதிர்க்கட்சிகளால் 'பெயர் மாற்றப்பட்ட ஏமாற்றம்' என்றே ஒட்டுமொத்தமாக விமர்சிக்கப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில்

# ரூ.22.36 கோடியில் புதிய உயர்கல்வித் துறை கட்டடங்கள்!

**– முதலமைச்சர் விஜய் திறந்து வைத்தார்!**




தமிழகத்தில் உயர்கல்வித் துறையை மேம்படுத்த அதன் ஒரு பகுதியாக, வேலூர் மாவட்டத்தில் ரூ.22.36 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் அரசு கல்லூரிகளுக்கான 5 புதிய உயர்கல்வித் துறை திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

**திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு**

காட்பாடி வட்டம், சேர்க்காட்டில் அமைந்துள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழக வளாகத்தில் புதுப்பிக்கத்தக்கப் பாடப் பிரிவுகளான சமூகவியல், சுற்றுச்சூழல் அறிவியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆகிய 3 புதிய துறைகளுக்காக 18 நவீன வகுப்பறைகளுடன் கூடிய 3 மாடிக் கட்டடம் திறக்கப்பட்டுள்ளது.

**முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி**

வேலூரில் அமைந்துள்ள இக்கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதால், கூடுதலாக 10 வகுப்பறைகள், 2 அதிநவீன ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைத் தொகுப்புகளுடன் கூடிய பிரம்மாண்ட 3 மாடிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப நிறுவனம்**

காட்பாடியில் உள்ள இந்த புகழ்பெற்ற அரசு பொறியியல் கல்லூரிக்குத் தேவையான கூடுதல் உள்கட்டமைப்பு மற்றும் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் இத்திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மாதனூர்**

இக்கல்லூரியில் ரூ.2 கோடியே 33 லட்சத்து 13 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் 2 நவீன கழிப்பறைத் தொகுப்புகள் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளன.

வேலூர் மாவட்ட ஆட்சியர் பி.எஸ். லீலா அலெக்ஸ் நேரில் சென்று பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள 18 புதிய வகுப்பறைகள் மற்றும் உள்கட்டமைப்புகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் காட்பாடி சட்டப்பேரவை உறுப்பினர் மருத்துவர் ம. சுதாகர், காட்பாடி ஒன்றியக் குழுத் தலைவர் வே. வேல்முருகன், திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பதிவாளர் ஜே. செந்தில்குமார் வேல்முருகன் மற்றும் வளாக இயக்குநர் அ. இளங்கோவன் உட்படப் பல முக்கிய அரசு உயர் அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேலூர் மாவட்டத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மாணவர்களுக்கு தரமான கல்வி தடையின்றி கிடைக்க இப்புதிய கல்விசார் கட்டடங்கள் பெரும் உதவியாக இருக்கும் என்று கல்வி ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். குறிப்பாக, புதிய அறிவியல் மற்றும் சமூகவியல் பிரிவுகளுக்கான நவீன ஆய்வகங்கள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் மூலம் மாணவர்களின் ஆராய்ச்சித் திறன் மேம்படும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



# காங்கிரஸ் தயவு வேண்டும் என்பதால் மேகதாது விவகாரத்தில் முதல்வர் மௌனம்!

## – திமுக ஆர்ப்பாட்டத்தில் உதயநிதி பேச்சு

தவெக அரசைக் கண்டித்து தஞ்சை பனகல் கட்டடம் முன்பு திமுக சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உதயநிதி பேசியதாவது....

தவெக ஆட்சிக்கு வந்து 3 மாதங்கள் ஆகிவிட்டது. இதுவரை முதல்வர் வாயில் இருந்து பாஜக என்று ஒருவார்த்தைக் கூட வரவில்லை. முதல்வர் அவ்வளவு பெரிய தைரியசாலி. தில்லிக்கு போராட சென்ற தமிழக விவசா யிகளை மகாராஷ்டிர காவல் துறை அவர்களை வழிமறித்து பாதியில் இறக்கிவிட்டு மீண்டும் தமிழ்நாட்டுக்கே அனுப்பிவைத்துவிட்டனர்.

இதைக் கண்டித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உள்பட அனைத்து எதிர்கட்சிகளும் அறிக்கைகள் விட்டனர். இதைப் பற்றியும் முதல்வர் வாய்த் திறக்கவில்லை. ஏன், மகாராஷ்டிரத்தில் நடப்பது பாஜக ஆட்சி. முதல்வர்தான் இப்படி என்றால் நீர்வளத் துறை அமைச்சர் இருக்கிறார். இப்படி ஒரு அமைச்சரை நீங்கள் பார்த்திருக்கவே முடியாது. பத்திரிக்கையாளர்களை பார்த்தாலே திருடன் மாதிரி ஓடுகிறார். வேளாண் துறை அமைச்சர் ஒருத்தர் இருக்கிறார்.

அவர் வேளாண் பட்ஜெட்டை திருப்பதிக்கு கொண்டு சென்று பூஜை போட்டுவிட்டு வருகிறார். இப்படி மொத்த அமைச்சரவையும் ஒரு ஜோக்கர் கூட்டமாக தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது. இந்த ஆட்சியில் முதல்வர் ரிலீஸ் போடுகிறார். அமைச்சர்கள் ரிலீஸ் போடுறாங்க. விவசா யிகள் கண்ணீர் வடிக்கின்றனர். ஆனால் அமைச்சர்கள் சினிமா தியேட்டருக்குப் போய் கண்ணீர் வடிக்கின்றனர். யார் அமைச்சர் என அதிகாரிகளுக்கே தெரியவில்லை.

யார், யார் அமைச்சர் என முதல்வருக்கே தெரியாது. காவிரி விவகாரத்தில் திமுக சட்டப் போராட்டத்தை தொடங்கியுள்ளது. உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தவெக ஆட்சி அமைந்ததில் இருந்து அதிக கஷ்டங்களை அனுபவிப்பது விவசாயிகள் தான்.

ஏதாவது பிரச்னை வந்தால் மக்களை எப்படி திசை திருப்பலாம் என்றுதான் முதல்வர் யோசிக்கிறார். திமுகவின் தூண்டுதலின் பேரில் விவசாயிகள் போராடுவதாகக் கூறி கொச்சைப்படுத்தியவர் முதல்வர் விஜய். தயவு செய்து இந்த பக்கம் வந்துவிடாதீர்கள் என முதல்வர் விஜய்யிடம் கர்நாடக முதல்வர் கூறிவிட்டார்.

காங்கிரஸின தயவு வேண்டும் என்பதால் கர்நாடகத்தை கேள்வி கேட்க முதல்வர் விஜய்க்கு பயம். ஆட்சிக்கு வந்தவுடன் ரூ.50,000க்குள் உள்ள பயிர்க்கடன் தள்ளுபடி என அறிவித்தார்கள். ரூ.35,000க்கு மேல் யாருக்கும் பயிர்க்கடன் தள்ளுபடி இல்லை என்பதே தற்போதைய நிலை. தேர்தல் அறிக்கையில் கூறியபடி முழுமையாக பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# ரூ.2.79 கோடி ஜிஎஸ்டி பாக்கி?

## – கூலிவேலை செய்யும் பெண்ணுக்கு ஷாக் கொடுத்த வணிகவரி துறை






திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையை சேர்ந்த ஏழைப் பெண் ருக்மணி, கிராமப்புற 125 நாள் வேலைத் திட்டத்தில் ஏரி வேலைக்கு சென்று வந்துள்ளார்.. அந்த பணத்தையும் பெறுவதற்காக வங்கிக்கு சென்றுள்ளார்.. ஆனால், ரூ.2.79 கோடி ஜி.எஸ்.டி வரி ஏய்ப்பு செய்ததாக கூறி ஆம்பூர் வணிகவரித்துறை ருக்மணியின் வங்கிக் கணக்கை முடக்கியுள்ளது. இதை கேட்டு ருக்மணி வெலவெலத்து போய்விட்டார்..!!

125 நாள் வேலைத் திட்டம் (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் விரிவாக்கம்) என்பது கிராமப்புற ஏழை குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 125 நாட்கள் வரை கூலியுடன் வேலைவாய்ப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மத்திய அரசின் திட்டமாகும்.

இந்த திட்டத்தின் மூலம் கிராமங்களில் சாலை, குளம், நீர்நிலைகள் சீரமைப்பு, மரநடுகை உள்ளிட்ட பொதுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புற மக்களுக்கு வாழ்வாதாரத்தை உறுதி செய்வதாகும்.

ருக்மணி வழக்கம்போல் சந்தைக்கோடியூர் பகுதியிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கு சென்றிருக்கிறார். அங்குள்ள அதிகாரிகளிடம் தனது பேங்க் பாஸ்புக்கை தந்து, பணத்தை எடுக்க முயன்றுள்ளார்.. ஆனால் ருக்மணியின் வங்கிக் கணக்கு மொத்தமாக முடக்கப்பட்டிருந்தது. காரணம், ஆம்பூர் வட்ட வணிகவரித்துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் இருந்து வங்கி நிர்வாகத்திற்கு கடிதம் ஒன்று வந்துள்ளது. அதில் ருக்மணி "ஆர்.எம்.டிரேடர்ஸ்' என்ற பெயரில் பெரிய அளவில் வணிக நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார், அந்த தொழில் நிறுவனத்தின் மூலம் அரசுக்குச் செலுத்த வேண்டிய ஜிஎஸ்டியை செலுத்தாமல், சுமார் 2 கோடியே 79 லட்சத்து 19 ஆயிரத்து 420 ரூபாய் வரி ஏய்ப்பு செய்துள்ளார். எனவே ருக்மணியின் வங்கிக் கணக்கை உடனடியாக முடக்க வேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளதாம்.

இந்த விவரத்தை வங்கி அதிகாரிகள் ருக்மணியிடம்படித்து சொல்லவும், நிலை குலைந்து போனார், தான் அப்படிப்பட்ட எந்தவொரு தொழில் நிறுவனத்தையும் நடத்தவில்லை என்றும், ஏரி வேலைக்கு சென்றுதான் தனது வாழ்க்கையைக் கழித்து வருவதாகவும் கண்ணீருடன் வங்கியிலேயே கதறினார்.. ஆனாலும், வணிகவரித் துறையின் அதிகாரப்பூர்வக் கடிதம் வந்துள்ளதால் வங்கி அதிகாரிகளால் ருக்மணிக்கு பணத்தை வழங்க முடியாமல் போனது. இதனால், மிகுந்த ஏமாற்றத்துடனும் மனவேதனையுடனும் வீட்டிற்குத் திரும்பி சென்றார் ருக்மணி.

கூலி வேலைக்கு செல்லும் ஒரு ஏழைப்பெண்ணின் பெயரையும், அவரது ஆவணங்களையும் தவறாகப் பயன்படுத்தி யாராவது போலி நிறுவனம் தொடங்கி கோடிக்கணக்கில் வரி ஏய்ப்பு செய்துள்ளனரா என்ற கோணத்தில் இந்தச் சம்பவம் பெரும் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது. 125 நாள் வேலை திட்டப் பெண்ணுக்கு ரூ.2.79 கோடி ஜி.எஸ்.டி. வரி நோட்டீஸ் அனுப்பப்பட்ட இந்த சம்பவம், திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி வருகிறது...!!





# “போராடிப் பெற்ற தீர்ப்பைக்கூட காப்பாற்ற முடியாத அரசு”

## - எடப்பாடி பழனிசாமி

தீரன் சின்னமலையின் நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மரியாதை செலுத்திய பின்னர், அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது, ``தீரன் சின்னமலையின் நினைவு நாளில் அவரது தியாகத்தையும் வீரத்தையும் போற்றி வணங்குகிறேன். காவிரி நதிநீர் பிரச்னை மற்றும் மேகதாது அணை கட்டுவது தொடர்பாக கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்றே தெரியவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு விவசாய பிரதிநிதிகளை அழைத்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ஆலோசிக்க வேண்டும் என்று அதிமுக சார்பிலும், பிற கட்சித் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் சார்பிலும் பலமுறை வலியுறுத்தப்பட்டது. மூத்த சட்ட வல்லுநர்களோடு ஆலோசித்து இதற்கொரு தீர்வு காண வேண்டும் என்று ஊடகங்கள் மூலமாகவும் அறிக்கைகள் மூலமாகவும் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால், இந்த அரசு அதைப் பற்றிச் சிந்திக்கவும் இல்லை, கவலைப்படவும் இல்லை.

அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை. இது மிகுந்த வேதனை அளிக்கின்றது. முன்பு அ.தி.மு.க ஆட்சியாக இருந்தாலும் சரி, தி.மு.க ஆட்சியாக இருந்தாலும் சரி, காவிரி அல்லது மேகதாது பிரச்னை வரும்போது அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டி, சட்டப்பூர்வமாக உச்ச நீதிமன்றத்தை அணுகி தீர்வு காண்பார்கள்.

அ.தி.மு.க ஆட்சியில் காவிரி நதிநீர் பிரச்னையில் போராடிப் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைக்கூட, இந்த அரசால் காப்பாற்ற முடியாத நிலை உள்ளது. கர்நாடக அரசு அங்குள்ள அரசியல் கட்சிகளையும் விவசாயிகளையும் மதிக்கிறது. ஆனால் தமிழகத்தில் உள்ள அரசு செயல்படுகிறதா என்பதே கேள்விக்குறியாக உள்ளது. காவிரி விவகாரத்தின் வரலாறு தெரியாத ஒரு ஆட்சியாகவே இது செயல்படுகிறது." என்றார்.

# இரண்டே நாளில் கபினி அணை எப்படி நிரம்பியது?

## – சிபிஎம் சண்முகம்

கபினி அணை எப்படி இரண்டு நாட்களில் நிரம்பியது? காவிரி கண்காணிப்புக் குழு கண்காணிக்கும் லட்சணம் இதுதானா என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: கர்நாடகாவில் உள்ள கபினி அணையிலிருந்து இன்று வினாடிக்கு 10,000 கன அடி நீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. விரைவில் அணை நிரம்பும் என்று கர்நாடக முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்.

காவிரி மேலாண்மை ஆணையம் தமிழ்நாட்டிற்கு 3,500 கன அடி நீர் திறந்து விட வேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு உத்தரவிட்டபோது, "கர்நாடக அணைகளில் தண்ணீரே இல்லை; குடிநீருக்கே பற்றாக்குறை ஏற்படும்" என்று கூறி கர்நாடக அரசின் பிரதிநிதிகள் தண்ணீர் திறந்து விட முடியாது என்றனர்.

இரண்டு நாட்களில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அணை எப்படி இரண்டே நாட்களில் நிரம்பியது? காவிரி கண்காணிப்புக் குழு கண்காணிக்கும் லட்சணம் இதுதானா? எப்படி இருப்பினும் இயற்கை வென்றது! இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

காவிரியில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கன்னட கூட்டமைப்பின் தலைவர் வாட்டாள் நாகராஜ் ஆகஸ்ட் 13ஆம் தேதி போராட்டம் நடத்த அறிவித்துள்ளார். மேலும் பெங்களூருக்கு முதல்வர் விஜய் வரும் போது விமான நிலையம் முற்றுகையிடப்படும் என்றும் வாட்டாள் நாகராஜ் எச்சரிக்கை விடுத்திருந்தார். இதையொட்டிதான் விஜய் இப்போது கர்நாடகாவுக்கு வரவேண்டாம் என டி.கே. சிவக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.



அதாவது 15 நாட்களுக்கு தினமும் 3500 கனஅடி நீரை தமிழகத்திற்கு திறக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதை ஏற்க மறுத்து கன்னட அமைப்பினர் வரும் ஆகஸ்ட் 13 ஆம் தேதி காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை கர்நாடகா முழுவதும் பந்த் கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் கபினி அணையின் நீர் மட்டம் அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து அணையின் பாதுகாப்பு கருதி கபினியில் இருந்து வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

கபினி அணையின் அதிகபட்ச நீரின் அளவு 65 அடி. தற்போது 56.28 அடி நீர் உள்ளது. கேஆர்எஸ் அணையின் அதிகபட்ச நீரின் அளவு 124.8 அடி. தற்போது 91.8 அடி நீர் உள்ளது.

கர்நாடகாவில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட மறுத்து வரும் நிலையில் அங்கு பெய்யும் கனமழையால் அணைகளின் கரை உடைந்து ஆபத்தை ஏற்படுத்தும் என கருதி நேற்றைய தினம் கபினி அணையில் இருந்து 10 ஆயிரம் கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது கர்நாடகாவிற்கு வெள்ள நீரால் அசம்பாவிதம் ஏற்படக் கூடாது என்பதற்காக திறந்துவிடப்பட்டதே தவிர, இவர்கள் காவிரி மேலாண்மை ஆணையத்தின் தீர்ப்பை மதித்து திறந்துவிடவில்லை.



# வருவாய்த்துறை, காவல்துறை ஆதரவோடு மணல்கொள்ளை!

## நடவடிக்கை எடுப்பாரா ஆட்சியர்?

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலம் அருகே, கிராம மக்களின் எதிர்ப்பையும் மீறி சட்டவிரோதமாக சவுடு மண் அள்ளிய டிராக்டரைத் தடுத்து நிறுத்த பெண் ஒருவர் அதன் முன்பு படுத்துப் போராட்டம் நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தின் போது, மண் அள்ளும் நபரின் தாயாரான மற்றொரு பெண், "நாங்கள் போலீஸ் மற்றும் தாசில்தார் உள்ளிட்ட அனைவருக்கும் லஞ்சம் கொடுத்துவிட்டுத்தான் மண் அள்ளுகிறோம்" எனப் பகிரங்கமாகக் கூறி சட்டவிரோதச் செயலை நியாயப்படுத்திய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் அடுத்த கொட்டுப்புலி கிராமத்தில் கடந்த சில நாட்களாக சவுடு மண் அள்ளப்பட்டு வந்துள்ளது.

அனுமதிக்கப்பட்ட அளவை விட மிக அதிகமாகவும், சட்டவிரோதமாகவும் மண் அள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாதிப்புகள்: இதனால் தங்களின் விவசாய நிலங்கள் பாழாவதோடு, நிலத்தடி நீர் மட்டமும் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக அப்பகுதி கிராம மக்கள் தொடர் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

அதிகாரிகளின் போக்கு: மக்களின் எதிர்ப்பையும் மீறி, வருவாய்த்துறை மற்றும் காவல் துறையினரின் முழு ஆதரவுடன் தொடர்ந்து மண் அள்ளப்பட்டு வந்ததாகக் கிராமத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்தப் பயனும் இல்லாததால் ஆத்திரமடைந்த கிராமத்து பெண் ஒருவர், மண் ஏற்றி வந்த டிராக்டரை அதிரடியாக வழிமறித்தார். டிராக்டரின் சக்கரத்திற்கு முன்பாக, தரையில் படுத்து தனி ஆளாக அவர் துணிச்சலுடன் போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் மண் கடத்தல் காரர்களால் டிராக்டரை முன்னோக்கி நகர்த்த முடியவில்லை.

அந்தப் பெண் போராட்டம் நடத்திய போது, மண் அள்ளும் நபர்கள் அந்தப் பெண்ணை மிரட்டும் தொனியில் பேசினர். "ஏன் இங்க வந்து படுத்துக் கிடக்கிற? போலீஸ் கிட்டயும் தாசில்தார் கிட்டயும் போய் சொல்ல வேண்டியதுதானே?" என்று கத்தினர்.



அப்போது, மண் அள்ள அனுமதி பெற்ற நபரின் தாயாரான மூதாட்டி ஒருவர் அங்கு வந்து, கிராம மக்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அவர் பேசும்போது, "என் மகன் சும்மா காசு கொடுக்காமல் மண் எடுக்கவில்லை. போலீஸ்காரர்கள், தாசில்தார் என எல்லோருக்கும் லஞ்சம் கொடுத்துவிட்டுத்தான் மண் அள்ளுகிறோம்" எனப் பகிரங்கமாகக் கூறி, தங்களின் மண் கொள்ளையை நியாயப்படுத்தினார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஆர்.எஸ். மங்கலம் காவல்துறையினர், போராட்டத்தில் ஈடுபட்ட பெண்ணிடம், "முறையான புகார் இருந்தால் தாசில்தாரிடம் கொடுங்கள்" என்று கூறிவிட்டு, அங்கிருந்து நகர்ந்ததாகச் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த முழுச் சம்பவமும் அங்கிருந்தவர்களால் வீடியோ எடுக்கப்பட்டு, சமூக வலைத்தளங்களில் Nakkheeran மற்றும் Polimer News போன்ற செய்தித் தளங்களின் வாயிலாகப் பரவி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மாவட்ட ஆட்சியர் இந்த விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டு உரிய விசாரணை நடத்த வேண்டும்.

லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்படும் அரசு அதிகாரிகள் மற்றும் சட்டவிரோத மண் கொள்ளையர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# சாதி மறுப்பு திருமணம் செய்த மாற்றுத்திறனாளி தம்பதிக்குக் கொலை மிரட்டல்!

சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதால் மாற்றுத்திறனாளி தம்பதிக்குத் தொடர்ந்து கொலை மிரட்டல்விடுத்து வரும் நபர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

நெமிலி வட்டம், கரியாகுடல் பகுதியைச் சேர்ந்தவர் கே. பாபு. வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த இவர், இரண்டு கால்களும் செய லிழந்த நிலையிலும் ஊர் ஊராகச் சென்று தின்பண்டங்கள்வியாபாரம் செய்து சுயதொழில் மூலம் பிழைப்பு நடத்தி வருகிறார்.

இவரும், அதே பகுதி யைச் சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளியான கீதாலட்சுமிஎன்பவரும் காதலித்து கடந்த2017ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இவர்களது சாதி மறுப்பு திருமணத்திற்கு இரு வீட்டாரும் கடும்எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

கரியாகுடல் பகுதியில் உள்ள நீர்நிலை புறம் போக்கு இடத்தில் பாபுவின்தந்தை சுமார் 50 ஆண்டு களுக்கும் மேலாக வீடு கட்டி வசித்து வந்தார். பெற்றோர் மறைந்த நிலையில், தாய்தந்தை இல்லாத மாற்றுத்திறனாளியான பாபுவிற்கு அந்த வீட்டில் தங்குவதற்கு அவரது சகோதரர் பெரியசாமிஇடம் கொடுக்க மறுத்து வந்துள்ளார்.

சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதால் ஏற்பட்ட வஞ்சத்தால், பாபுவை குடும்பத்தில் சேர்க்காமலும்,வீட்டைப் பிரித்துக் கொடுக்காமலும் பெரியசாமி தொடர்ந்து பாபு மற்றும் அவரது மனை விக்குக் கொலை மிரட்டல்விடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.இந்நிலையில், பாதிக்கப் பட்ட மாற்றுத்திறனாளி தம்பதிக்கு ஆதரவாகவும், கொலை மிரட்டல் விடுக்கும் சகோதரர்பெரியசாமி மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் திங்கள்கிழமை (ஆக. 3) மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது.

சாதி மறுப்பு திருமணத்திற்கு எதிர்ப்புதெரி வித்து மாற்றுத்திறனாளி தம்பதிக்குத் தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வரும் பெரியசாமி மீது காவல்துறையினர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஆதரவற்றநிலையில் உள்ள இந்த மாற்றுத்திறனாளி தம்பதிக்கு அரசு சார்பில் உடனடியாகத் தொகுப்பு வீடு வழங்கிப் பாதுகாக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. மனுவைப் பெற்றுக் கொண்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் இச்சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.






# வேலியே பயிரை மேய்ந்த OA!

## புதுக்கோட்டை அரசு மருத்துவமனை அவலம்

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருந்தகத்தில் இருந்து வலி நிவாரண மற்றும் தூக்க மாத்திரைகளைத் திருடி, இளைஞர்களுக்குப் போதைக்காக விற்ற தற்காலிக ஊழியர்கள் உள்ளிட்ட 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருந்தகப் பிரிவில் தற்காலிக மற்றும் ஒப்பந்தப் பணியாளராகப் பணியாற்றி வந்தவர் பிரேம்குமார். இவர் மருத்துவமனை மருந்தகத்தில் இருந்து அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மயக்க மருந்துகள் மற்றும் தீவிர வலி நிவாரண மாத்திரைகளைத் தொடர்ந்து திருடி வந்துள்ளார்.

இந்த மாத்திரைகளை வெளியில் உள்ள இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்குப் போதைக்காக அதிக விலைக்கு விற்றுப் பணம் சம்பாதித்துள்ளார். இதற்கிடையில், திருச்சியிலிருந்து மாத்திரைகளை வாங்கி விற்பனை செய்வதற்காக 17 மற்றும் 18 வயதுடைய இரு சிறுவர்கள் இவரைத் தேடி வந்துள்ளனர். இதுகுறித்து போலீஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலின் பேரில், அதிரடி சோதனை நடத்திய போலீஸார் பிரேம்குமார் மற்றும் அவருடன் இருந்த நபர்களைக் கையும் களவுமாகக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 280 போதை மாத்திரைகள், 3 செல்போன்களையும் போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்:

இச்சம்பவம் வெளியில் தெரிந்தவுடன், மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிர்வாகம் உடனடியாகச் செயல்பட்டு, சம்பந்தப்பட்ட தற்காலிக ஊழியர்களைப் பணி நீக்கம் செய்து உத்தரவிட்டது. கைது செய்யப்பட்ட மூவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அரசு மருத்துவமனைகளில் ஏழை எளிய மக்களுக்காக வழங்கப்படும் மருந்துகள், போதைப்பொருள் கும்பலின் கைக்குச் சென்றிருப்பது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 2 மாதங்களுக்கும் மேலாக இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில், மருத்துவமனை நிர்வாகமும் தணிக்கைப் பிரிவும் இதைக் கவனிக்காமல் இருந்தது எப்படி என்ற கேள்வியை சமூக ஆர்வலர்கள் எழுப்புகின்றனர். அரசு மருந்தகக் கண்காணிப்பை மேலும் பலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகிறது.

மருந்து திருட்டைத் தடுக்க நவீனத் தொழில்நுட்பம் மற்றும் கண்காணிப்பு

முறையை அமல்படுத்துவது அவசியமாகும்.

ஒவ்வொரு மருந்துப் பெட்டியும், மாத்திரை அட்டையும் பார்கோடு மூலம் ஸ்கேன் செய்யப்பட வேண்டும். மருந்து கொள்முதல், விநியோகம் மற்றும் இருப்பு விவரங்களை நிர்வகிக்க ஆன்லைன் மென்பொருள் பயன்படுத்தப்பட வேண்டும். தீவிர வலி நிவாரணிகள் மற்றும் மயக்க மருந்துகள் எப்போதும் இரட்டைப் பூட்டுடன் கூடிய இரும்பு அலமாரிகளில் மட்டுமே வைக்கப்பட வேண்டும் இந்த அலமாரிகளின் சாவிகள் மருத்துவரின் நேரடிக் கண்காணிப்பில் மட்டுமே இருக்க வேண்டும்.

ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்களை முக்கியமான மருந்து விநியோகப் பணிகளிலோ அல்லது கணினிப் பதிவேற்றப் பணிகளிலோ தனியாக அனுமதிக்கக் கூடாது. நிரந்தர அரசு ஊழியரின் மேற்பார்வை அவசியம்.

மருந்தக ஊழியர்களை ஒரே பிரிவில் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்காமல், 3 மாதங்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் வெவ்வேறு பிரிவுகளுக்கு மாற்ற வேண்டும். இது முறைகேடான நெட்வொர்க் உருவாவதைத் தடுக்கும்.

மாத இறுதித் தணிக்கைக்காகக் காத்திருக்காமல், ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் கணினியில் உள்ள இருப்பும், அலமாரியில் உள்ள மருந்துகளின் எண்ணிக்கையும் சரியாக உள்ளதா எனத் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மருந்துகள் நேரடியாக மருந்தகக் கணினிக்கு ஆன்லைனில் அனுப்பப்பட வேண்டும். நோயாளி கொண்டு வரும் காகிதச் சீட்டுகளை மட்டும் நம்பி மருந்து வழங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

அதிக வீரியமுள்ள மருந்துகளைப் பெறும் நோயாளிகளின் ஆதார் எண் அல்லது மருத்துவமனை புறநோயாளி சீட்டு எண்ணை மருந்து வழங்கும் மென்பொருளில் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

மருந்துச் சேமிப்புக் கிடங்கு, மருந்தகம் மற்றும் மருந்துகள் விநியோகம் அனைத்தும் 24 மணி நேரமும் இயங்கும் உயர்தர CCTV கேமராக்களின் கண்காணிப்பில் இருக்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் உயிர்காக்கும் மருந்துகள் தவறான வழிகளுக்குச் செல்வதைத் தடுக்க, நிர்வாகக் கட்டுப்பாடுகளுடன் இந்தத் தொழில்நுட்பக் கண்காணிப்பு முறைகளையும் உடனடியாக அமல்படுத்துவதே நிரந்தரத் தீர்வாகும்.

# புதிய சிமெண்ட் சாலையில் தேங்கும் தண்ணீர்!


## பொதுமக்கள் கொதிப்பு !



ராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட கரிவேடு ஊராட்சி, (மதுரா) சித்தஞ்சி ரோட்டு தெருவில் அண்மையில் போடப்பட்ட புதிய சிமெண்ட்சாலை, மழைநீர் வடிவதற்கு வழியின்றி 'மினி குளம்' போலமாறியுள்ளதால் அப்பகுதிமக்கள் பெரும் அவதிக் குள்ளாகி வருகின்றனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ஒன்றிய பொது நிதி (2024–25) திட்டத்தின்கீழ் சுமார் ரூ.6லட்சம் மதிப்பீட்டில் இந்தச் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது. சாலை அமைக்கும் பணி முடிந்து சில தினங்களேஆன நிலையில், முறையான நீர் வடி கால் வசதி மற்றும் சரியான திட்டமிடல் இன்றி சாலை அமைக்கப்பட்டதால், தெருவில் தேங்கும் கழிவுநீரும் மழைநீரும் வடிய வழியின்றி குளம்போல தேங்கி நிற்கிறது.

மேலும், தேங்கியுள்ள நீரில் கொசுக்கள் அதிகளவில் உற்பத்தி உற்பத்தியாகி வருகின்றன. வரவிருக்கும் மழைக்காலத்தில் இந்த நிலை நீடித்தால், டெங்கு, மலேரியா உள்ளிட்ட தொற்றுநோய்கள் பரவி அப்பகுதி பொதுமக்களின், குறிப்பாக குழந்தைகளின் ஆரோக்கியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறும் என அஞ்சப்படுகிறது. இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் உடனடியாக சாலையைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# சேவையா? சுரண்டலா?

## – தடுக்குமா ஒன்றிய அரசு

எளிய மற்றும் நடுத்தர மக்களின் சேமிப்பைப் பாதுகாக்கும் அரண்களாக விளங்க வேண்டிய வங்கிகள், இன்றைக்கு வாடிக்கையாளர்களின் பாக்கெட்டுகளில் இருந்து சத்தமில்லாமல் பணத்தைப் பறித்து வருவதை மாநிலங்களவையில் மத்திய நிதி அமைச்சகம் சமர்ப்பித்துள்ள புள்ளிவிவரங்கள் அப்பட்டமாக வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளன.

வங்கிகள் வழங்கும் ‘டெபிட் கார்டு’ பயன்பாட்டிற்காக 12 பொதுத்துறை வங்கிகள் மட்டும்202122ம் ஆண்டில் வசூலித்த தொகை ரூ.3,905.50கோடி. ஆனால், 202526ம் நிதியாண்டில் இது 93.7விழுக்காடு வரை உயர்ந்து ரூ.7,563.80 கோடியாகப் பெருகியிருக்கிறது! ஒரே கார்டுக்குச் செலுத்தப்படும் கட்டணம் 88.8 விழுக்காடு உயர்த்தப்பட்டு, சராசரியாக நபர் ஒருவரிடமிருந்து ரூ.115.10பறிக்கப்படுகிறது.

இதைவிடப் பெருங்கொடுமை, ஏழை எளிய மக்களின் ‘குறைந்தபட்ச இருப்புத் தொகை’ பராமரிப்பு நிலவரம் தான். நாடாளுமன்றத்தில், “சேமிப்புக் கணக்கில் குறைந்தபட்ச இருப்புப் பராமரிக்காததற்கு 10 பொதுத்துறை வங்கிகள் அபராதம் வசூலிப்பதில்லை” என்று நிதி அமைச்சகம் கூறுகிறது. ஆனால், உண்மை புள்ளிவிவரங்களோ முற்றிலும் வேறொரு கசப்பான நிஜத்தைச் சொல்கின்றன. 12 பொதுத்துறை வங்கிகளுமே அபராதம் வசூலித்துள்ளன; குறிப்பாக எஸ்பிஐ வங்கி கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் ரூ.1,598 கோடியை அபராதமாகத் திரட்டியுள்ளது.

பொதுத்துறை வங்கிகள் கடந்த 4 நிதியாண்டுகளில் குறைந்தபட்ச இருப்புப் பராமரிக்காத காரணத்திற்காக வசூலித்த மொத்த அபராதம் ரூ.10,230.75 கோடி. தனியார் வங்கிகளோ ஒரு படி மேலே போய்,ரூ.15,939.62 கோடியைச் சுரண்டியுள்ளன. இதில் ஹெச்டிஎஃப்சி வங்கி மட்டும் ரூ.5,668 கோடியையும், ஆக்சிஸ் வங்கி ரூ.3,786கோடியையும் மக்களின் கணக்குகளில் இருந்து அபராதமாக அள்ளியுள்ளன.

வங்கிக் கணக்கில் குறைந்தபட்சத் தொகையைக் கூட வைத்திருக்க முடியாத நிலையில் ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருக்கிறார் என்றுதானே பொருள்? அத்தகைய எளிய மனிதருக்கு உதவிக்கரம் நீட்டுவதற்குப் பதிலாக, அவரிடமே ‘அபராதம்’ என்ற பெயரில் எஞ்சியிருக்கும் சில நூறுகளையும் பறிப்பது எந்தவிதத்தில் நியாயம்?

“குறைந்தபட்சத் தொகைக்கான அபராதம் நியாயமாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும்” என்று ரிசர்வ் வங்கி வெற்று வழிகாட்டுதல்களை விடுப்பதோடு தன் கடமை முடிந்துவிட்டதாகக் கருதி விலகிக் கொள்ளக் கூடாது.

கட்டணம் என்ற பெயரில் மக்களின் பணத்தைச் சிறுகச் சிறுகக் கரைப்பதை ஒன்றிய அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் உடனடியாகத் தலையிட்டுத் தடுத்து நிறுத்த வேண்டும். வங்கிகள் என்பவை வர்த்தக நிறுவனங்கள் மட்டுமே அல்ல; அவை சமூகப் பொறுப்புமிக்கச் சேவை அமைப்புகளும் கூட.

# தேசிய தேர்வு முகமையைக் கலைப்பதே தீர்வு!




கல்வியைக் காக்க நடைபெற்ற மாணவர் இளைஞர் எழுச்சியின் விளைவாக, கல்வித்து றை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வேறு வழி யின்றி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இருப்பினும், இது அமைச்சரின் பதவி விலகுவதோடு நின்றுவிடக்கூடிய சாதாரணப் பிரச்சனை அல்ல; மாறாக, நாட்டின் கோடிக்கண க்கான மாணவர்களின் எதிர்காலத்தைச் சூறை யாடி வரும் தேசிய தேர்வு முகமையின் (NTA) அடிப்படையான கட்டமைப்புச் சீர்கேடுகளும், தொடரும் குளறுபடிகளுமே இதன் மூலவே ராகும். அமைச்சரின் வெளியேற்றம் என்பது மோடி அரசின் தோல்வியை ஒப்புக் கொள்வ தும், பொறுப்பேற்பதுமே ஆகும். ஆனால் மோடி அரசு அப்படிக் கூட சொல்லிக்கொள்ளவில்லை. பிரதானுக்கு புகழாரம் சூட்டிக்கொண்டிருக்கிறது.

அது ஒருபுறம் இருக்க, மாநிலங்களவையில் சிபிஎம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வி. சிவ தாசன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு அளித்துள்ள எழுத்துப்பூர்வமான பதிலில், தேசிய தேர்வு முகமையிடம் சொந்தமாக ஒரு நிரந்தர ஊழியர் கூட இல்லை என்ற அதிர்ச்சிகர மான உண்மை அம்பலமாகியுள்ளது. 2018 முதல் 6.6 கோடி மாணவர்களுக்காக 270 தேர்வுகளை நடத்திய இந்த அமைப்பு, வெறும் 24 பதிலி ஊழி யர்களைக் கொண்டே இயங்குகிறது; 73 பேர் மட்டுமே வெளிமுகமை மூலம் நியமிக்கப் பட்டுள்ளனர். எந்தவித நிர்வாகக் கட்டமை ப்பும் இன்றி, லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை சூதாடும் இந்த அமைப்பு உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும்.

நிதிக்கணக்கீடுகளிலும் அரசு பச்சையான ஒளிவுமறைவு அரசியலில் ஈடுபட்டுள்ளது. தேர்வுக் கட்டணம் மூலம் 201819 இல் 504.16 கோடி யாக இருந்த இந்த முகமையின் வருவாய், 2023 24 இல் 1,116.84 கோடியாக உயர்ந்துள்ளதாகக் கூறிய அரசு, 202426 ஆண்டுகளுக்கான வரு வாயை வெளியிட மறுத்துவிட்டது. மேலும், முந்தைய தரவுகளுடன் தற்போது வழங்கப்பட்ட தரவுகள் பெருமளவில் முரண்படுகின்றன. 2019 20 இல் 50.19 கோடி ரூபாயும், 202021 இல் 8.31 கோடி ரூபாயும் கணக்கில் முரண்பாடு உள்ளது. இம்முகமை தொடங்கியதிலிருந்து சுமார் 100 வினாத்தாள் கசிவுகள் மற்றும் 50க்கும் மேற் பட்ட மறுதேர்வுகள் நடந்துள்ள போதிலும், உண் மைகளை மூடிமறைக்க அரசு முற்படுகிறது.

நீட் முதல் நெட் வரை அனைத்துத் தேர்வு களையும் நாசமாக்கிய இந்த முறைகேடுகளால் 22 மாணவர்கள் உயிரை இழந்துள்ளனர். எனவே அமைச்சரின் ராஜினாமாவுடன் நின்று விடாமல், என்டிஏ எனும் தேசிய தேர்வு முக மையை முற்றிலும் கலைப்பதும், மாணவர்களை வஞ்சிக்கும் தேசிய கல்விக் கொள்கை 2020ஐ திரும்பப் பெறுவதுமே உண்மையான ஜன நாயக நீதியைப் பெற்றுத் தரும்.

ஒட்டுமொத்த கல்வித்துறையையும் சீரழித்து வரும் இந்த அமைப்புக்கு முட்டுக்கொடுக்கும் கார்ப்பரேட் மற்றும் காவி சக்திகளின் சதித்திட்டங்களை இளைய சமுதாயம் தொடர்ந்து முறியடிக்க வேண்டும்.

# பசுமை பூமியில் கார்ப்பரேட் காலடி!

## நந்தியாலத்தின் தற்போதைய நிலை

ராணிப்பேட்டை மாவட்டத்தின் முக்கிய விவசாயப் பகுதிகளில் ஒன்றான வாலாஜா தாலுகா, பாலாற்றின் படுகையை ஒட்டி அமைந்துள்ளதால் வளம் கொழிக்கும் பகுதியாகும். குறிப்பாக, நந்தியாலம் ஊராட்சிப் பகுதியில் நெல், கரும்பு, வாழை மற்றும் பல்வேறு காய்கறிகள் விளைவிக்கப்படும் நஞ்சை (நன்செய்) நிலங்கள் அதிகளவில் உள்ளன.

தற்போது, இப்பகுதியில் கார்ப்பரேட் நிறுவனம் திட்டமிட்டு விவசாயிகளிடமிருந்து அடிமாட்டு விலைக்கு நிலங்களை வாங்கியுள்ளது. சுமார் 50 ஏக்கர் பரப்பளவிலான பசுமை நிலங்களை புல்டோசர்கள் கொண்டு அழித்து, வீட்டுமனைப் பிரிவுகளாக மாற்றும் பணிகள் அதிவேகமாக நடைபெற்று வருகின்றன. பல தலைமுறைகளாக விவசாயம் செழித்த பூமி, இன்று சிமெண்ட் சாலைகளாகவும், கற்கள் நடப்பட்ட மனைகளாகவும் உருமாறி நிற்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டம் மற்றும் வருவாய்த்துறை விதிகளின்படி, தடையற்ற நீர்வரத்து உள்ள, விவசாயம் நடைபெறும் நஞ்சை நிலங்களை அவ்வளவு எளிதாக வீட்டுமனைகளாக மாற்ற முடியாது. அதற்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் (DTCP) கடுமையான அனுமதிகள் தேவை.

ஆனால், நந்தியாலம் ஊராட்சியில் இந்த விதிகள் அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

போலி ஆவணங்கள் மூலம் நிலமாற்றம்: நன்செய் நிலங்களை, விவசாயம் செய்யப்படாத 'புன்செய்' அல்லது 'தரிசு' நிலங்கள் என வருவாய்த்துறை ஆவணங்களில் தவறாகக் காட்டி முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிகாரிகளின் கூட்டு: உள்ளூர் கிராம நிர்வாக அலுவலர் (VAO), வட்டாட்சியர் (Tahsildar) முதல் உயர் அதிகாரிகள் வரை கார்ப்பரேட் நிறுவனத்திற்குச் சாதகமாகச் செயல்பட்டு, அடுக்கடுக்கான அனுமதிகளைத் தாராளமாக வழங்கியுள்ளனர்.

அத்துமீறிய கட்டமைப்பு: நீர்நிலைகளின் வரத்து வாய்க்கால்களை மூடி, நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமித்தே இந்த சுமார் 50 ஏக்கர் லேஅவுட் உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்த கார்ப்பரேட் ஆக்கிரமிப்பால் நந்தியாலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்கள் சந்திக்கவிருக்கும் பேராபத்துகள்:

நெல் கிண்ணம் அழியும் ஆபத்து: நூறு ஏக்கர் நஞ்சை நிலம் அழிக்கப்படுவதால், ஆண்டுக்குக் பல நூறு டன் நெல் மற்றும் உணவு உற்பத்தி நேரடியாகப் பாதிக்கப்படும்.






நீர்வரத்துத் தடை மற்றும் வெள்ள அபாயம்: விளைநிலங்களுக்குப் பாயும் பாசன வாய்க்கால்களும், ஓடைகளும் மூடப்படுவதால், மழைக்காலங்களில் உபரி நீர் வெளியேற முடியாமல் சுற்றியுள்ள மற்ற விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்யும்.

நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்திற்குச் செல்லும்: விவசாய நிலங்கள் கான்கிரீட் காடுகளாக மாறும்போது, மழைநீர் பூமிக்குள் இறங்குவது தடுக்கப்படும். இதனால் ஒட்டுமொத்த வாலாஜா தாலுகாவிலும் நிலத்தடி நீர்மட்டம் கடுமையான வீழ்ச்சியைச் சந்திக்கும்.

கூலித்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பறிபோதல்: நிலங்களை நம்பியிருந்த நூற்றுக்கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்து, வாழ்வாதாரத்திற்காக நகரங்களை நோக்கி இடம்பெயர வேண்டிய அவலநிலை உருவாகும்.

கார்ப்பரேட் நிறுவனத்தின் இந்த அராஜகப் போக்கிற்கு எதிராகவும், அதற்குத் துணைபோகும் அதிகாரிகளுக்கு எதிராகவும் நந்தியாலம் கிராம மக்கள் திரண்டு போராடத் தொடங்கியுள்ளனர்.

"எங்கள் கண் முன்னாலேயே பச்சைப் பசேலென இருந்த வயல்களை அழித்து, பிளாட் போடுகிறார்கள். அதிகாரிகளிடம் மனு கொடுத்தால், கார்ப்பரேட் நிறுவனத்திற்கு ஆதரவாகவே பேசுகிறார்கள். இந்நிலை நீடித்தால் எங்கள் கிராமத்தில் விவசாயமே இல்லாமல் போய்விடும்," என்று வேதனையுடன் தெரிவிக்கின்றனர் உள்ளூர் விவசாயிகள்.

விவசாய சங்கங்கள் உடனடியாக மாவட்ட நிர்வாகம் தலையிட்டு, இந்த நிலமாற்ற அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என்றும், நீர்நில ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் பிரம்மாண்ட போராட்டம் நடத்தப்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.

வளர்ச்சி என்ற பெயரில் விளைநிலங்களை அழிப்பது எதிர்காலச் சந்ததியின் உணவுப் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும் செயலாகும். தமிழக அரசு உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட வேண்டும்.

நந்தியாலம் ஊராட்சியில் கார்ப்பரேட் நிறுவனம் வாங்கிய சுமார் 50 ஏக்கர் நிலங்களின் ஆவணங்களை மறுஆய்வு செய்யத் தனி அதிகாரியைக் கொண்டு சிறப்புக் குழு அமைக்கப்பட வேண்டும்.

முறைகேடான அனுமதிகள் ரத்து: நஞ்சை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்ற வழங்கப்பட்ட DTCP மற்றும் உள்ளாட்சி அனுமதிகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

ஊழல் அதிகாரிகள் மீது நடவடிக்கை: கார்ப்பரேட் நிறுவனத்திடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு, விவசாய நிலங்களை மாற்றத் துணையாக இருந்த வருவாய்த்துறை அதிகாரிகள் மீது கடுமையான துறை ரீதியான மற்றும் சட்ட நடவடிக்கை பாய வேண்டும்.

"விவசாயம் செழித்தால் தான் நாடு வாழும்." கார்ப்பரேட்டுகளின் லாப வெறிக்காக நந்தியாலத்தின் நஞ்சை நிலங்கள் பலியாவதைத் தடுக்க வேண்டியது அரசின் கட்டாயக் கடமையாகும்.

# தொழிலதிபரை மிரட்டி ரூ.40 லட்சம் பணம் பறித்த இன்ஸ்பெக்டர்



காவல் ஆய்வாளர் புஹாரி

சென்னை பழைய வண்ணாரப்பேட்டையை சேர்ந்தவர் அகில் குமார். இவர் தங்க வியாபாரம் மற்றும் ஷேர் மார்க்கெட் உள்ளிட்ட தொழில் செய்து வருகிறார்.

இவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் ஒன்றை அளித்தார்.

அதில், காவல் ஆய்வாளர் புஹாரி என்பவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு தொடர்பாக தன்னை அழைத்து விசாரணை மேற்கொண்டதாகவும் அப்போது ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் மொட்டை கிருஷ்ணன் என்பவர் வழக்கில் இருப்பதாகவும் அவருடைய செல்போன் எண்ணை ஆய்வு செய்த போது தனது பெயரில் சிம் இருந்ததாகவும் தெரிவித்தார்.

இதனால் தன்னை இந்த வழக்கில் சேர்த்து விடுவதாக கூறி மிரட்டியதாகவும், இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்றால் தனக்கு 20 லட்சம் ரூபாய் தர வேண்டும் என ஆய்வாளர் புகாரி தெரிவித்த நிலையில் தான் 20 லட்சம் ரூபாயை கொடுத்ததாகவும் பின்னர் இரண்டு வருடங்களில் பல காரணங்களை கூறி தன்னிடமிருந்து 40 லட்சம் ரூபாய் வரை பணம் பெற்றதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று மீண்டும் ஆய்வாளர் புஹாரி, தனது வீட்டிற்கு வந்து இணை ஆணையர் போதைப்பொருள் தொடர்பாக விசாரிக்கச் சொன்னதாகக் கூறி, வீடு முழுவதும் சோதனை செய்த நிலையில், சோதனையில் ஒன்றும் சிக்காததால் மீண்டும் 5 லட்சம் ரூபாய் வரை கேட்டு ஆய்வாளர் மிரட்டியதாக புகாரில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உடனடியாக 5 லட்சம் ரூபாய் தயார் செய்து யானை கவுனி காவல் நிலையம் அருகே கொண்டு சென்று கொடுத்ததாகவும், பின்னர் ஆய்வாளர் புஹாரி மற்றும் அவருடன் வந்த காவலர்கள் காரில் ஏறிச் சென்று விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேபோல ஆய்வாளர் புஹாரி சுமார் 40 லட்சம் ரூபாய் வரை பணம் தன்னிடம் இருந்து பறித்து விட்டதாகவும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி, காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகாரில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, புகார் தொடர்பாக பூக்கடை துணை ஆணையர் கோபி, காவல் ஆய்வாளர் புஹாரி மற்றும் அவருடன் வந்த காவலர்களிடம் துறை ரீதியான விசாரணை மேற்கொண்ட நிலையில், குற்றத்தில் ஈடுபட்டது கண்டு பிடிக்கப்பட்டது. கைதானவர்களில் ஒருவர் இன்ஸ்பெக்டர் மற்றொருவர் பிரண்ட்ஸ் ஆப் போலீஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து காவல் ஆய்வாளர் புகாரி காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

மேலும் விசாரணையில் 40 லட்சம் ரூபாய் வரை பணம் பறித்ததும் தெரியவந்ததால் காவல் ஆய்வாளர் புகாரியை போலீசார் கைது செய்தனர். மேலும் இந்த வழக்கில் வேறு காவலர்களுக்கு தொடர்பு இருக்கிறதா என்ற கோணங்களில் போலீஸார் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஆயுதப்படை காவலர் சீனிவாசன் என்பவரையும் யானை கவுனி போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாதியில் நின்ற வாலாஜா–சோளிங்கர் சாலை விரிவாக்கப் பணி

## – வாகன ஓட்டிகள் அவதி!




வாலாஜா–சோளிங்கர் நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டதால், கடுமையான தூசி மண்டலம் உருவாகி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். ராணிப்பேட்டை மாவட்டத்தின் முக்கிய இணைப்புச் சாலையாகத் திகழும் இந்த வழித்தடத்தில், எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் இன்றி பணிகள் முடங்கியுள்ளதால், விபத்துகளும் சுகாதாரச் சீர்கேடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் வாலாஜா சோளிங்கர் சாலை விரிவாக்கப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், தற்போதைய நிலவரப்படி இப்பணிகள் முழுமையடையாமல் பாதியிலேயே முடங்கியுள்ளன.

சாலை விரிவாக்கத்திற்காகப் பழைய தார் சாலைகள் தோண்டப்பட்டு, ஜல்லிக் கற்களும் மண் கலவைகளும் அப்படியே கொட்டப்பட்டுள்ளன.. ஒப்பந்ததாரர்களின் சுணக்கம் மற்றும் நிர்வாகக் காரணங்களால் கடந்த சில வாரங்களாகப் பணிகள் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

தோண்டப்பட்ட சாலைகளில் தண்ணீர் தெளிப்பது போன்ற அத்தியாவசியப் பராமரிப்புப் பணிகள் எதுவும் செய்யப்படுவதில்லை.பணிகள் பாதியில் நிற்பதால், இந்தச் சாலையைப் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான மக்கள் தினசரி நரக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லும்போது காற்றில் கலக்கும் நுண்தூசிகளால் இப்பகுதி மக்களுக்கு ஆஸ்துமா, தொடர் இருமல், கண் எரிச்சல் மற்றும் தோல் ஒவ்வாமை போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.

முன்னால் செல்லும் வாகனங்கள் எழுப்பும் தூசியால், பின்னால் வரும் வாகன ஓட்டிகளுக்குச் சாலை சரியாகத் தெரிவதில்லை (Visibility). இதனால் இருசக்கர வாகன ஓட்டிகள் நிலைதடுமாறி விழுந்து விபத்துக்குள்ளாகின்றனர்.

இந்தச் சாலையானது சோளிங்கர் லட்சுமி நரசிம்மர் சுவாமி கோயிலுக்குச் செல்லும் பக்தர்களுக்கும், ராணிப்பேட்டை, அரக்கோணம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் தொழில்பேட்டை தொழிலாளர்களுக்கும் முக்கிய வழித்தடமாகும்.

பாதிக்கப்படும் முக்கிய இடங்கள்: வாலாஜா நகர்ப் பகுதி, அரசு மருத்துவமனைக்கு அருகிலுள்ள பகுதிகள் மற்றும் இடைப்பட்ட கிராமப்புறச் சாலைகள்.


பள்ளிக் குழந்தைகள் அவதி: இந்த வழியாகச் செல்லும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் தினசரி தூசியில் நனைந்தபடியே செல்லும் அவலநிலை நீடிக்கிறது.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து மாவட்ட நிர்வாகமும், நெடுஞ்சாலைத்துறையும் உடனடியாகத் தலையிட வேண்டும் எனப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தண்ணீர் தெளிக்க வேண்டும்: பணிகள் மீண்டும் தொடங்கும் வரை, தூசி பறப்பதைத் தடுக்கச் சாலைகளில் தினசரி காலை மற்றும் மாலை வேளைகளில் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

விபத்துகளைத் தவிர்க்கப் பனிமூட்டம் போன்ற தூசி மண்டலப் பகுதிகளில் ஒளிரும் எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

பணிகளை விரைவுபடுத்துக: முடங்கிக் கிடக்கும் ஒப்பந்தங்களை மறுஆய்வு செய்து, சாலை விரிவாக்கப் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து முடிக்க வேண்டும்.




### கேள்விக்குறியான சட்ட பட்டதாரிகளின் எதிர்காலம்

# பார் கவுன்சில் வழக்கறிஞர் பதிவில் நீடிக்கும் பெருந்தாமதம்!

ஆண்டாண்டு காலம் கஷ்டப்பட்டு படித்து, சட்டப் படிப்பை முடித்துவிட்டு, நீதிமன்றங்களில் கால் பதிக்கக் காத்திருக்கும் பல்லாயிரக்கணக்கான இளம் சட்ட பட்டதாரிகள், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலின் (BCTNPY) மெத்தனப் போக்காலும், நிர்வாகக் குளறுபடிகளாலும் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருகின்றனர். வழக்கறிஞராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் மாதக்கணக்கில், சிலருக்கு ஆண்டுக்கணக்கிலும் தேங்கிக் கிடப்பது தற்போதைய பெரும் கவலையாக மாறியுள்ளது.

சட்டப் படிப்பு முடித்தவுடன் நீதிமன்றங்களில் வாதாட, மாநில பார் கவுன்சிலில் முறைப்படி பதிவு செய்வது கட்டாயமாகும். ஆனால், தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாகப் பதிவு நடைமுறைகள் ஆமை வேகத்தில் நகர்கின்றன அல்லது முற்றிலும் முடங்கியுள்ளன. இதற்கு முக்கியக் காரணங்களாகப் பின்வருபவை சுட்டிக்காட்டப்படுகின்றன:

நிர்வாகக் குழு மற்றும் தேர்தல் குளறுபடிகள்: பார் கவுன்சில் தேர்தல் மற்றும் இடைக்கால ஏற்பாடுகளின் போது ஏற்பட்ட குளறுபடிகளால், அட்வகேட் ஜெனரல் (Advocate General) தலைமையிலான குழுவின் ஆலோசனையின்றி முந்தைய பதிவுச் செயற்குழு செயல்பட்டதாகக் கூறி, சமீபத்தில் ஜூலை 2026ல் பதிவுச் செயற்குழு (Enrolment Committee) திடீரென மாற்றியமைக்கப்பட்டது. இந்த திடீர் மாற்றங்களால் முந்தைய தேதிகள் ரத்து செய்யப்பட்டு புதிய தேக்கநிலை உருவாகியுள்ளது.

கடுமையாக்கப்பட்டுள்ள பின்னணி சரிபார்ப்பு: நீதிமன்றங்களில் வழக்கறிஞர்கள் மீதான குற்ற வழக்குகள் அதிகரித்து வருவதை மெட்ராஸ் உயர் நீதிமன்றம் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளது. தீவிர குற்றப்பின்னணி கொண்டவர்களைப் பதிவு செய்யக் கூடாது என்ற நீதிமன்ற உத்தரவால், விண்ணப்பதாரர்களின் பின்னணி சரிபார்ப்பு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு நடைமுறைகள் மிகத் தீவிரமாக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரு சாதாரண விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட நீண்ட காலம் பிடிக்கிறது.

பார் கவுன்சில் நிர்ணயிக்கும் அதிகப்படியான பதிவுக் கட்டணங்கள் (Enrolment Fees) மற்றும் அது தொடர்பான உச்ச நீதிமன்ற/உயர் நீதிமன்ற வழக்குகளும் மறைமுகமாகப் பதிவு தாமதத்திற்கு வழிவகுத்துள்ளன.

வழக்கறிஞர் பதிவு தாமதமாவதால் இளம் பட்டதாரிகள் சந்திக்கும் முக்கியப் பாதிப்புகள்:

நீதிமன்றப் பயிற்சி முடக்கம்: பார் கவுன்சிலில் பதிவு செய்யாமல் நீதிமன்றங்களில் வக்காலத்து தாக்கல் செய்யவோ, வழக்குகளில் ஆஜராகவோ முடியாது. இதனால் சீனியர் வழக்கறிஞர்களிடம் ஜூனியராகச் சேர முடியாமல் தவிக்கின்றனர்.

ஆண்டு வரம்பு மற்றும் பொருளாதார இழப்பு: பல ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பட்டதாரிகள், கல்விக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமலும், அன்றாட வாழ்வாதாரத்திற்கு வருமானமின்றியும் தவிக்கின்றனர்.

"பதிவு விண்ணப்பங்கள் பெறப்பட்ட 3 மாதங்களுக்குள் பரிசீலிக்கப்பட வேண்டும்; அதற்கு மேல் தாமதிப்பது அடிப்படை உரிமை மீறல்" என பி. ராஜி எதிர் பார் கவுன்சில் (2018) போன்ற முந்தைய நீதிமன்றத் தீர்ப்புகள் தெளிவுபடுத்தியிருந்தாலும், கள நிலவரம் அதற்கு மாறாகவே உள்ளது.

"நீதி தாமதிக்கப்படுவது நீதி மறுக்கப்படுவதற்குச் சமம்" (Justice delayed is justice denied) என்ற பழமொழி, தற்போது சட்டப் பட்டதாரிகளின் வாழ்க்கையிலேயே விளையாடிக் கொண்டிருக்கிறது.

சிறப்புப் பதிவுக் முகாம்கள்: தேங்கிக் கிடக்கும் பல்லாயிரக்கணக்கான விண்ணப்பங்களை விரைந்து சரிபார்க்க பார் கவுன்சில் கூடுதல் அதிகாரிகளை நியமிக்க வேண்டும். ஆன்லைன் விண்ணப்பச் சரிபார்ப்புக்கு குறிப்பிட்ட காலக்கெடுவை (Timeframe) நிர்ணயம் செய்ய வேண்டும்.



புதிய பதிவுச் செயற்குழு உடனடியாகப் பொறுப்பேற்று, எவ்வித அரசியல் மற்றும் நிர்வாகத் தடைகளுமின்றி வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் தொடர்ச்சியாகப் பதிவு விழாக்களை (Enrolment Functions) நடத்த வேண்டும்.

இளம் வழக்கறிஞர்களின் குரலுக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் செவிசாய்த்து, இந்த முடக்கத்தை உடனடியாக உடைக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த சட்டத்துறையின் எதிர்பார்ப்பாகும்.

---

## போக்குவரத்து விதிகளை மீறி வாகனம் ஓட்டுதல்

# கடந்த 6 மாதங்களில் ரூ.1.06 கோடி அபராதம்!

வேலூர் மாநகரில் கடந்த 6 மாதங்களில் போக்குவரத்து விதிகளை மீறி வாகன ஓட்டிகளுக்கு ரூ.1.06 கோடி அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து போலீசார் தெரிவித்தனர். வேலூர் மாநகரில் நாளுக்கு நாள் போக்குவரத்து விதி மீறலில் வாகன ஓட்டிகள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக செல்போன் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுவது, அதிக வேகமாக செல்வது, சிறுவர்கள் பைக் ஓட்டுவது, குடித்து விட்டு வாகனம் இயக்குவது மற்றும் நம்பர் போர்டு இல்லாமலும், ஒரு வழிப்பாதையில் வாகனம் செல்வது, சாலையோரம் வாகனங்களை நிறுத்துவது உள்ளிட்ட பல்வேறு போக்குவரத்து விதி மீறலில் ஈடுபட்டு வருகின்றனர்.



இதை தடுக்கும் விதமாக போலீசாரும் அடிக்கடி வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அப்போது, லைசென்ஸ் இல்லாமல் வாகனம் இயக்குவது, வாகனத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாமல் இயக்குவது உள்ளிட்ட பல்வேறு விதி மீறிலில் ஈடுபடும் வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதித்து வருகின்றனர். அதன்படி, இந்தாண்டு ஜனவரி மாதம் ஜூன் மாதம் வரை வேலூரில் போக்குவரத்து விதிகளை மீறியதாக 14 ஆயிரத்து 700 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ.1 கோடியே 6 லட்சத்து 75 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து போலீசார் தெரிவித்தனர்.

# ஆற்காடு மெயின் ரோட்டில் போதையில் இளைஞர் வெறிச்செயல்!




ஆற்காடு கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன் (வயது 30) என்பவர் ஆற்காடு வேலூர் மெயின் ரோட்டில் எவரெஸ்ட் ஆட்டோ கன்சல்டிங் என்ற தொழில் செய்து வருகிறார். இவருக்கும், ஆற்காடு கொல்லப்பாளையம் பகுதியைச் சேர்ந்த கார்த்தி (வயது 24) என்பவருக்கும் இடையே கடந்த 2024ம் ஆண்டு முதலே முன்விரோதம் இருந்து வந்துள்ளது. மணிகண்டன், கார்த்தியின் நண்பர்கள் சிலரை மிரட்டியதாகக் கூறப்படும் விவகாரத்தில் இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

வழக்கம்போல் ஆற்காடு பேருந்து நிலையம் அருகே உள்ள சாலைப் பகுதியில் மணிகண்டன் சென்றுகொண்டிருந்தபோது, அங்கு கஞ்சா போதையில் வந்த கார்த்தி அவரிடம் திடீரென வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். வாக்குவாதம் முற்றவே, திட்டமிட்டு வந்திருந்த கார்த்தி தன் வசம் வைத்திருந்த மிளகாய்பொடியை மணிகண்டனின் முகத்தில் வீசியுள்ளார்.

கண்கள் எரிச்சலால் மணிகண்டன் நிலைகுலைந்த தருணத்தைப் பயன்படுத்திய கார்த்தி, தனது இருசக்கர வாகனத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, மணிகண்டனை ஓட ஓட விரட்டி தலை மற்றும் உடலில் பல இடங்களில் கொடூரமாக வெட்டியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த மணிகண்டன் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்தார்.

பட்டப்பகலில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பேருந்து நிலையப் பகுதியில் நடந்த இந்த கொடூரத் தாக்குதலைக் கண்டு பொதுமக்கள் அலறியடித்து ஓடினர். இதுகுறித்து ஆற்காடு நகர போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், மயங்கிய நிலையில் இருந்த மணிகண்டனை மீட்டு ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட பின், மேல் சிகிச்சைக்காக ரத்தினகிரியில் உள்ள தனியார் மருத்துவமனை மற்றும் வேலூர் சி.எம்.சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இக்கொடூரச் செயலில் ஈடுபட்டு தப்பியோட முயன்ற முதன்மை குற்றவாளியான கார்த்தியை ஆற்காடு நகர போலீசார் விரைந்து செயல்பட்டு கைது செய்தனர். மேலும், இந்த தாக்குதலுக்கு உடந்தையாக இருந்ததாக கதிர்வேல் என்பவரையும் போலீசார் கைது செய்து, வேலூர் மத்திய சிறையில் அடைத்துள்ளன.

இச்சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி சமூக வலைத்தளங்களில் பரவி வருவதால், பொதுமக்கள் மத்தியில் பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. போதைப்பொருள் மற்றும் கஞ்சா புழக்கத்தினால் இது போன்ற வன்முறைச் சம்பவங்கள் நகரின் மையப்பகுதியில் நடப்பது குறித்து சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களின் பலத்த கவலைகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# வேலூரில் கடைகளில் கெட்டுப்போன உணவுப் பொருட்கள் பறிமுதல்!

## அதிகாரிகள் அதிரடி !

வேலூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள சில உணவகங்களில் தரம் குறைந்த உணவுகள் வழங்கப்படுவதாகவும், பழைய இறைச்சிகள் பயன்படுத்தப்படுவதாகவும் மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறைக்குத் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் இருந்தன. இதையடுத்து, மாவட்ட நியமன அலுவலரின் வழிகாட்டுதலின்படி, உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டு, தீவிரக் கண்காணிப்பு மற்றும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வேலூர் ஆற்காடு சாலை, புதிய பேருந்து நிலையம் மற்றும் காட்பாடி உள்ளிட்ட முக்கியப் பகுதிகளில் உள்ள பிரியாணி கடைகள், துரித உணவகங்கள் மற்றும் அசைவ ஹோட்டல்களில் அதிகாரிகள் திடீர் ஆய்வு நடத்தினர்.

சோதனையின் போது, குளிர்சாதனப் பெட்டிகளில் பதப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 20 கிலோவிற்கும் அதிகமான கெட்டுப்போன கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் மீன்கள் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன. இவை அனைத்தும் இரசாயனங்கள் கலந்து, சமைப்பதற்குத் தகுதியற்ற நிலையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

உணவுகளுக்குக் கூடுதல் நிறம் தருவதற்காகப் பயன்படுத்தப்பட்ட, தடைசெய்யப்பட்ட இரசாயனப் பொடிகளும் சில கடைகளில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

சுகாதாரமற்ற முறையில் உணவுகளைத் தயாரித்த கடைகளுக்கு ரூ.50,000/ வரை அபராதம் விதிக்கப்பட்டு, உரிய விளக்கமளிக்கக் கோரி நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

சில உணவகங்களின் சமையலறைகள் மிகவும் சுகாதாரமற்ற முறையில், ஈக்கள் மற்றும் பூச்சிகள் மொய்க்கும் வகையில் இருந்ததை அதிகாரிகள் கண்டறிந்தனர். சமைத்த உணவுகளையும், சமைக்காத பச்சை இறைச்சிகளையும் ஒரே குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்ததும் ஆய்வில் தெரியவந்தது. பறிமுதல் செய்யப்பட்ட



அனைத்துக் கெட்டுப்போன உணவுப் பொருட்களும் அதிகாரிகளால் உடனடியாகப் பாலித்தீன் பைகளில் சேகரிக்கப்பட்டு, இரசாயனம் தெளிக்கப்பட்டுப் பாதுகாப்பான முறையில் அழிக்கப்பட்டன.

"பொதுமக்களின் உயிருடன் விளையாடும் எந்தவொரு உணவக உரிமையாளர்களும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது. ஹோட்டல்களில் தினசரி புதிய இறைச்சிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். பழைய மற்றும் கெட்டுப்போன உணவுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கினால், கடைகளின் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டு, கடைகளுக்குச் சீல் வைக்கப்படும்," என எச்சரித்துள்ளனர்.

பொதுமக்கள் தாங்கள் வாங்கும் உணவுப் பொருட்களிலோ அல்லது உணவகங்களிலோ ஏதேனும் குறைபாடுகள் அல்லது தரம் குறைவான செயல்பாடுகள் இருப்பதை உணர்ந்தால், தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறையின் அதிகாரப்பூர்வ புகார் எண்ணான 9444042322 என்ற எண்ணிற்குத் தொடர்பு கொண்டு தாராளமாகப் புகார் அளிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய தொடர் அதிரடி சோதனைகள் வேலூர், வாலாஜா, ஆற்காடு மற்றும் ராணிப்பேட்டை ஆகிய சுற்றுவட்டாரப் பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்குத் தீவிரமாகத் தொடரும் என்றும் அதிகாரிகள் தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை கல்வித்துறை

# ஆசிரியர் பயிற்றுநர்களின் உயிரோடு விளையாடும் CEO?

இராணிப்பேட்டை மாவட்டக் கல்வித்துறையின் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்தது குறித்து ஆசிரியர்கள் பல்வேறு கடுமையான குற்றச்சாட்டுகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.




முன்னணியில் இருந்த இராணிப்பேட்டை மாவட்டம் தற்போது +2 பொதுத்தேர்வில் 37 வது இடத்திற்கும், 10ஆம் வகுப்புத் தேர்வில் கடைசி இடத்திற்கும் (38) தள்ளப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள 71 ஆசிரியர் பயிற்றுநர் பணியிடங்களில் வெறும் 19 பேர் மட்டுமே பணியில் உள்ளதால், ஊழியர்களுக்கு மிகக் கடுமையான வேலைப்பளு நிலவுகிறது.

### நிர்வாகத்தின் மீதான குற்றச்சாட்டுகள்

முதன்மைக்கல்வி அலுவலர் (CEO) மோகனா, உதவி திட்ட அலுவலர் செரின் பாத்திமா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலாஜி ஆகியோர் அடங்கிய அதிகாரிகள் குழுவே கல்வித்துறை வீழ்ச்சிக்குக் காரணம் என்று ஆசிரியர்கள் குற்றம் சாட்டுகின்றனர். முறையான திட்டமிடல் இன்றி ஊழியர்களிடம் 24 மணி நேரமும் வேலை வாங்குவதாகவும், மாவட்ட ஆட்சியர் பெயரைச் சொல்லி பணியாளர்களைப் பயமுறுத்துவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

### பணி நெருக்கடி மற்றும் விபத்து

இடைநின்ற மாணவர்களை ஐடிஐயில் சேர்க்கும் பணியில் ஏற்பட்ட தொடர் பணி நெருக்கடியால், வாலாஜா கிழக்கு வட்டார வள மேற்பார்வையாளர் செந்தில்துரை கார் விபத்தில் சிக்கி மியாட் (MIOT) மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் உள்ளார். இந்த விவகாரத்தை வெளியில் தெரியாமல் ஊடகங்களிடம் இருந்து மறைக்க பிர தமயந்தி மற்றும் பாலாஜி கூட்டணி முயல்வதாக ஆசிரியர்கள் கண்ணீருடன் கூறுகின்றனர்.


செந்தில்துரை

### ஆசிரியர் பயிற்றுநர்களின் முக்கிய கோரிக்கைகள்

விபத்தில் படுகாயமடைந்த மேற்பார்வையாளர் செந்தில்துரையின் முழு மருத்துவச் செலவையும் தமிழக அரசே ஏற்க வேண்டும். நிர்வாகச் சீர்கேட்டிற்கும் விபத்திற்கும் காரணமான CEO மோகனா, செரின் பாத்திமா மற்றும் ஒருங்கிணைப்பாளர் பாலாஜி ஆகியோர் மீது மாவட்ட ஆட்சியர் உடனடியாக உரிய துறைப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராணிப்பேட்டை மாவட்ட கல்வித்துறையில் அரங்கேறி வரும் அதிகாரிகளின் அதிரடி மற்றும் அலட்சியப் போக்கு, தற்போது ஒரு அரசு ஆசிரியரின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கியுள்ளது. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மோகனா மற்றும் அதிகாரிகள் செரின் பாத்திமா, பாலாஜி ஆகியோரின் "புகழ் வெறி" மற்றும் அதீத பணி நெருக்கடி காரணமாக, ஆசிரியர் பயிற்றுநர் செந்தில்துரை என்பவர் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகி, தற்போது படுகாயமடைந்து உயிருக்கு போராடி வரும் அவலம் அரங்கேறியுள்ளது. இது ஒட்டுமொத்த மாவட்ட ஆசிரியர் பயிற்றுநர்கள் மத்தியிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீதி கிடைக்கும் வரை விட மாட்டோம்" என தங்களது உரிமைகளுக்காகவும், தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் எஞ்சியிருக்கும் 19 ஆசிரியர்களும் தற்போது ஒன்றிணைந்து குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

# விரைவில் அதிமுக பொதுக் குழு!

## – எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு!

அதிமுக பொதுக் குழு கூட்டம் விரைவில் கூட்டப்படும் என பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியுள்ளார். அப்போது, சட்டசபை கூட்டத்தொடர் முடிந்த பிறகு, முதலில் செயற்குழு கூட்டப்படும். பிறகு பொதுக்குழு கூட்டப்படும் என தெரிவித்துள்ளார்.



முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைந்ததிலிருந்து அதிமுக ஒரு தேர்தலில் கூட வெற்றி பெறவில்லை. இந்த நிலையில் கடந்த சட்டசபைத் தேர்தலில் எதிர்க்கட்சி அந்தஸ்தை கூட அதிமுக பறிகொடுத்துவிட்டது. இது அதிமுகவினர் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. எனவே பொதுக் குழு கூட்டத்தை கூட்டி தேர்தல் தோல்விக்கு காரணத்தை ஆராய வேண்டும் என முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், எஸ்.பி. வேலுமணி. தங்கமணி உள்ளிட்டோர் வலியுறுத்தினர்.

இவ்வாறு வலியுறுத்தியும் எடப்பாடி பழனிசாமி தனது தோல்வியை ஒப்புக் கொள்ளாததால் இனியும் அதிமுகவில் இருந்தால் நமக்கு எதிர்காலம் கிடையாது என கருதிய மூத்த நிர்வாகிகள் மரகதம் குமரவேல், சத்தியபாமா, ஜெயக்குமார், இசக்கி சுப்பையா, சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகிய 6 பேர் தங்களது எம்எல்ஏ பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்துவிட்டனர்.

இப்படியே போனால் அதிமுகவில் எடப்பாடி பழனிசாமியும் அவரது மகன் மிதுனும் மட்டுமே இருக்க முடியும் என விமர்சனங்கள் எழுந்தன. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம், தவெகவில் இணைவார் என சொல்லப்பட்ட நிலையில் தற்போது வரை அவர் அதிமுக நிகழ்வுகளில் இருந்து ஒதுங்கியே உள்ளார்.

தேர்தல் முடிவுகளுக்கு பிறகு திமுகவுடன் கூட்டணி வைத்து ஆட்சியை பிடிக்க எடப்பாடி பழனிசாமி முயற்சித்ததாக குற்றம்சாட்டி 23 எம்எல்ஏக்கள் வேலுமணி தலைமையில் தனி அணியாக செயல்பட்டனர். வேலுமணி, சண்முகம், வீரமணி உள்ளிட்டோர் தவெக அரசு கொண்டு வந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதையடுத்து அவ்வாறு வாக்களித்தவர்களின் கட்சி பதவிகளை எடப்பாடி பழனிசாமி பறித்தார்.

இதைத் தொடர்ந்து எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்த அந்த 6 எம்எல்ஏக்களை தவிர மற்றவர்கள் எடப்பாடி பழனிசாமி அணிக்கே சென்றுவிட்டனர். அவர்களில் சி.வி.சண்முகம் தனியாகவே செயல்பட்டு வருகிறார்.

அது போல் பதவி பறிக்கப்பட்ட வேலுமணி உள்ளிட்டோருக்கு அண்மையில் புதிய பதவிகளை எடப்பாடி பழனிசாமி வழங்கினார். ஆனால் அந்த பதவிகளை ஏற்க வேலுமணி விரும்பவில்லை என சொல்லப்பட்டது.

அண்மையில் கூட சி.வி.சண்முகம், தான் அதிமுகவில் இருக்கிறேனா இல்லையா என்பதை எடப்பாடி பழனிசாமிதான் சொல்ல வேண்டும் என கூறியிருந்தார். ஒவ்வொரு முறையும் செய்தியாளர்களின் சந்திப்பின் போது பொதுக் குழு கூட்டத்தை கூட்ட வேண்டும் என்றே அவர் வலியுறுத்தி வந்தார்.

தற்போது சி.வி.சண்முகம் எதிர்பார்த்தது போல் எடப்பாடி பழனிசாமி விரைவில் பொதுக் குழுவை கூட்ட போவதாக அறிவித்திருக்கிறார். அந்த பொதுக் கூட்டத்தில் என்னென்ன நடக்குமோ? எடப்பாடி பழனிசாமியை பதவி விலக கோருவார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# ஆவடி விமானப்படை ஆள்சேர்ப்பு; எழுத்துதேர்வில் முறேகேடு!




சென்னை ஆவடி விமானப்படை மையத்தில் பணியாளர் சேர்க்கைக்கு எழுத்துத்தேர்வு நடந்தது. இந்த தேர்வில் முறைகேடு நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பாக ஆள்மாறாட்டம் செய்த இருவர், ஜி.எஸ்.எம். டிரான்ஸ்மிட்டர் வைத்து பதில்களை கேட்டு எழுதிய இருவர் என ஹரியானா மாநிலத்தை சேர்ந்த 4 பேரை ஆவடி முத்தாபுதுப்பேட்டை காவல் துறையினர் கைது செய்து தீவிர விசாரணை நடந்து வருகிறது.

விமானப்படை மையத்தில் நடைபெற்ற கிளார்க் மற்றும் ஓட்டுநர் பணிக்கு நடந்த தேர்வில் ஆள்மாறாட்டம் மற்றும் நவீன ஜி.எஸ்.எம். டிரான்ஸ்மிட்டர் கருவியைப் பயன்படுத்தி விமானப்படை தேர்வில் முறைகேட்டில் ஈடுபட்ட ஹரியானாவை சேர்ந்த 4 பேரை காவல் துறை கைது செய்துள்ளனர்.

தேர்வு அறைக்குள் நுழைய முயன்றபோது, hall ticketல் இருந்த புகைப்படமும் சம்பந்தப்பட்ட நபரின் முகமும் ஒத்துப்போகாததால் ஆள்மாறாட்டம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், நவீனஜி.எஸ்.எம். டிரான்ஸ்மிட்டர் மற்றும் ப்ளூடூத் போன்ற மின்னணு கருவிகளைப் பயன்படுத்தி தேர்வில் முறைகேடு செய்ய முயன்றதும் சோதனையில் அம்பலமானது.

ஆள்மாறாட்டம் செய்த ஹரியாணாவை சேர்ந்த கவுரவ் (21), அனில் (27) ஆகியோரும் டிரான்ஸ்மிட்டர் பாக்ஸ் வைத்து தேர்வு எழுதிய சவான் (25), தீபக் ( 24) ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். முத்தாபுதுப்பேட்டை மற்றும் ஆவடி போலீசார் இந்த 4 பேர் மீதும் 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, இவர்களுடன் தொடர்புடைய பிற நபர்கள் குறித்தும் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தேர்வு முறைகளில் வேறு ஏதும் முறைகேடு ஏற்பட்டுள்ளதா அதேபோன்றுள வினாத்தாள் ஏதும் கசிந்துள்ளது என்ற பல்வேறு கோணத்தில் விமானப்படை அதிகாரிகளும் ஆவடி முத்தாபுதுப்பேட்டை போலீசாரும் தற்போது தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வடமாநிலத்தில் இருந்து வந்து தேர்வில் முறைகேடு செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


Owned and Published by **KALAIVANI MURUGAN** from No.3/74, Road Street, Thimmanacherikuppam Post, Arapakkam, Vellore District, Tamilnadu-632517, Printed at S S Printing, No. 18/19, Venkata Mastry street, Mannady Chenai - 600 001.
Editor: **G.MURUGAN** Cell: 9003006655

# செய்தியாளர்கள் தேவை!



தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட வாரியாக நிருபர்கள், போட்டோகிராபர்கள் தேவை.

**குறைந்தது ஓராண்டு அனுபவமுள்ள செய்தியாளர்கள் தேவை**

## விளம்பரக் கட்டண விவரம்

| அளவு | கலர் | கட்டணம்(ரூ.) |
|---|---|---|
| முழு பக்கம் | வண்ணத்தில் | ரூ. 10,000/- |
| அரை பக்கம் | வண்ணத்தில் | ரூ. 5,000/- |
| முழு பக்கம் | கருப்பு, வெள்ளை | ரூ. 5,000/- |
| அரை பக்கம் | கருப்பு, வெள்ளை | ரூ. 3,000/- |
| உள் அட்டை 2, 3 | வண்ணத்தில் | ரூ. 15,000/- |
| பின் அட்டை 4 | வண்ணத்தில் | ரூ. 20,000/- |

visit us: bhoothakannadi.com

bhoothakannadi_cheithigal

bhoothakannadi cheithigal

@BHOOTHAKANNADI_CHEITHIGAL

BHOOTHA KANNADI Tamil Monthly

**பூத கண்ணாடி**

BHOOTHAKANNADI - Tamil Monthly, PRGI Registeration No.148391(TNTAM/2018/75836)

## தமிழ் தெரியாது பெருமையல்ல!

- தனுஷ்

சென்னை சாலிகிராமத்தில் உள்ள தாய் சத்யா மெட்ரிகுலேஷன் பள்ளியின் கட்டிடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட நடிகர் தனுஷ் பேசியபோது...

"நான் இங்கு படித்த காலத்தில் ஆங்கிலம் சரியாக பேச வராது, தவறுகளுடனே பேசுவோம். ஆனால் எங்களுக்குத் தமிழ் நன்றாகத் தெரியும்.... இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. நான் சந்திக்கும் 10 பேரில் 8 பேருக்குத் தமிழ் எழுத, படிக்கத் தெரியவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் புலமை பெற்றுள்ளனர். இது மிகவும் மனவேதனை அளிக்கிறது" தமிழ் தெரியாது என்று சொல்வது உண்மையில் பெருமையல்ல; அது அவமானம் என்றார்.





## கார்த்திக் சுப்பராஜின் 'டோரதி'!...

இயக்குதர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள புதிய படத்திற்கு டோரதி என பெயரிடப்பட்டுள்ளது.

கீர்த்தி சுரேஷ், சனந்த், ரிஷிகாந்த் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள இப்படம், 2026 டொராண்டோ சர்வதேச திரைப்பட விழாவில் சென்டர்பீஸ் பிரிவில் திரையிடவும் தேர்வாகியுள்ளது....

கார்த்திக் சுப்பராஜின் தம்மம் ஃபிலிம்ஸ், ஜியோ ஸ்டுடியோஸ், சிக்யா என்டர்டெயின்மென்ட் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு மாஸ்ட்ரோ இளையராஜா இசையமைத்துள்ளார். இப்படம் செப்டம்பர் 25ம் தேதி வெளியாகும் எனவும் கார்த்திக் சுப்பராஜ் அறிவித்துள்ளார்....